Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2517)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 30 திங்கட்கிழமை (13.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 225
















# உள்ளக நடைமுறைகளின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## இந்திய நிலையை விளக்கினார் தூதுவர் காந்தா



(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா தான் விரும்புவதை நிறைவேற்றுமாறு இலங்கைக்கு உத்தரவிடமாட்டாது. உள்ளக நடைமுறைகளின் மூலமே இலங்கை மக்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதே இந்தியாவின் நிலைப்பாடென விடைபெற்றுச் செல்லும் இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை, ஜெனிவாவில் இலங்கைக்கெதிராக இந்தியா ஏன் வாக்களித்தது என்பது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2009 இற்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து இந்தியா மகிழ்ச்சியடைகிறது. இலங்கையின் நலன்களைக் காயப்படுத்தக் கூடிய எதையுமே, இந்தியா செய்யாது.

ஜெனிவாவில் இந்தியாவால் அளிக்கப்பட்ட வாக்கு இலங்கைக்கு எதிரானது அல்ல. இலங்கையினதும், இந்தியாவினதும் அடிப்படையான நலன்களுக்கு இடையில் தொடர்பு உள்ளது. இந்த நலனகளில் எந்த முரண்பாடும் கிடையாது.

ஜெனிவாவில் இலங்கையைத் தனிமைப்படுத்தும் வகையில், இந்தியா வாக்களித்ததற்குக் காரணம், நாம் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை அமெரிக்கத் தீர்மானம் கொண்டுவரும் என்ற நம்பிக்கை தான். அரசியல் தீர்வு விடயத்தில், இந்தியா விரும்புவதை நிறைவேற்றும்படி இலங்கைக்கு உத்தரவிடாது. உள்ளக நடைமுறைகளின் மூலம் இலங்கை மக்கள் (19)ஆம் பக்கம் பார்க்க

## கஜேந்திரகுமாரின் கேள்விகளால் திணறிப்போனாராம் சம்பந்தன்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் திண்டாடிய சம்பவம் மன்னாரில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இடம்பெற்றிருக்கின்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

சிவில் சமூகப் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் தலைமையில் நேற்று முன்தினம் மன்னாரில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

குறித்த சந்திப்பின் போது தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம், தமிழ்த் தேசிய பொதுச் சபை ஒன்றை உருவாக்குதல் உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்து (19)ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பை பதிய தமிழரசுக் கட்சியே தடை

### சுரேஷ் விசனம்

தமிழரசுக்கட்சி தனது முடிவில் இருந்து மாறவில்லை எனவே நான்கு கட்சிகளும் இணைந்து ஓர் நிலைப்பாட்டை எடுக்க வேண்டியுள்ளது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப தலைமையிலான குழுவினர தமிழத் (19)ஆம் பக்கம் பார்க்க

## யூன் மாத முற்பகுதியிலேயே புதிய இந்திய தூதுவர் பதவியேற்பு

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள வை.கே.சின்ஹா அடுத்தமாத நடுப்பகுதியிலேயே தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்றரை ஆண்டுகளாக இலங்கைக்கான இந்தியத் தூதுவராகப் பணியாற்றிய அசோக் கே காந்தா அடுத்த மாத நடுப்பகுதியுடன் புதுடில்லி திரும்பவுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சில், கிழக்காசிய விவகாரப் பிரிவுக்குப் பொறுப்பான செயலராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், கொழும்புக்கான புதிய இந்தியத் தூதுவராக வை.கே. சிங் நியமிக்கப்பட்டுள்ளார். (19)ஆம் பக்கம் பார்க்க

## 19 ஆவது திருத்தச் சட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கும்

மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்களை குறைக்குமெனக் கருதப்படும் 19 ஆவது சட்டத் திருத்தத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

மாகாண சபைகளுக்கு குறைந்த அளவிலேனும் அதிகாரம் வழங்கும் 13 ஆவது சட்டத் திருததத்துக்கு மாறாக, இந்தப் புதிய சட்டத்திருத்தம் கொண்டு வரப் படுகிறது என்று கூறப்படும் நிலையில், அதற்கு எதிர்ப்புகள் எழ (19)ஆம் பக்கம் பார்க்க



## இராணுவ பிரசன்னம் குறைந்தால் வடக்கில் வாழ்வு நிலை மேம்படும்

### கூறுகிறார் கே.பி.

வடக்கில் இராணுவ பிரசன்னம் குறைந்து சிவில் நிர்வாகம் அமைந்தால் அது மக்களின் வாழ்க்கை நிலை மேம்பாடடைய உதவுமென விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் சர்வதேச ஆயுத தொடர்பாளர் கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவத்தினர் இருப்பது ஒரு வகையில் பாதுகாப்புக்கு உறுதுணை என்றாலும் மக்கள் அச்சப்படுவர் என அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள செஞ்சோலை சிறுவர் காப்பக நிலையத்தில் உள்ள தனது காரியாலயத்தில் வைத்து இந்து செய்தித் தாளுக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (19)ஆம் பக்கம் பார்க்க

## அதிகரிக்காது பாண்விலை

மின்சாரக் கட்டணத்தில் அதிகரிப்பு ஏற்பட்டதும் வெதுப்பக உற்பத்திகளின் விலைகளிலும் அதிகரிப்பு ஏற்படுமென வெளியாகும் பொய்யான தகவல்களை பாவனையாளர்கள் நம்ப வேண்டாமென அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. இது தொடர்பாக (19)ஆம் பக்கம் பார்க்க

## உழவு இயந்திரம் தடம்புரண்டு மாநகர ஊழியர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பின் வீதியில் இடம்பெற்ற உழவு இயந்திர விபத்தில் 20 பேர் காயமடைந்தனர்.

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரத்தில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் வேலை செய்வதற்காக நேற்றுக் காலை 6.10 மணியளவில் சென்றுள்ளனர். நல்லூர் பின் வீதியில் உழவு இயந்திரம் வளைவு ஒன்றில் திரும்பும் வேளையில் குடைசாய்ந்துள்ளது.

இதனால் உழவு இயந்திரத்தில் பயணித்த சாரதி உட்பட (19)ஆம் பக்கம் பார்க்க

உள்ளே...
தரம் – 5
புலமைப் பரிசில்
மாதிரி வினாத்
தாள்


# நிவாரண விநியோகம்

(வரணி)

வடக்கு வரணி ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் ஊனமுற்ற பெண்களைத்தலைமைத்துவமாகக் கொண்டவர்களுக்கான உலக உணவுத்திட்டத்தினால் வழங்கப்படும் பணத்திற்கான நிவாரணச் சிட்டைகள் தற்போது கிராம அலுவலரால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பயனாளிகள் வரணிச்சந்தி (மத்தி) ஈ-9 கிளையில் பொருட்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் நிவாரண விநியோகம் 2013 ஜனவரி மாதம் தொடக்கம் உலக உணவுத் திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (150)

# அடிப்படை வசதிகள் இல்லாத ஓமந்தை உபதபாற்கந்தோர்



(ஓமந்தை)

ஓமந்தையில் உள்ள உபதபாற்கந்தோர் அடிப்படை வசதிகளின்றி இயங்குவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். ஓமந்தை உபதபாற்கந்தோர் ஏ-9 வீதியில் இருப்பதால் அதிகளவான பொது மக்கள் பல்வேறு தேவைகளிற்காக தினமும் வந்து செல்கின்றனர். இங்கு அடிப்படைத்தேவைகள் எவையும் இல்லையென பொது மக்கள் தெரிவிக்கின்றனர். அரச காணியில் அலுவலகம் இயங்குகின்ற போதும் போதியளவு கட்டட வசதிகள் இல்லையெனவும் கூறுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து ஓமந்தை உபதபாற்கந்தோரில் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வதோடு, நிரந்தரமான உபதபால் கந்தோருக்கு கட்டடம் ஒன்றும் அமைத்துத் தருமாறு ஓமந்தை பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# நவீன வசதிகளுடனான சிறைச்சாலை யாழில் விரைவில் திறக்கப்படும்





(யாழ்ப்பாணம்)

பல்வேறு இடநெருக்கடிகளுக்கும் மத்தியில் இந்த தற்காலிக சிறைச்சாலை இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதற்கான புதிய கட்டடம் பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி செய்யக்கூடிய மண்டப வசதிகளுடன் கூடிய நவீன சிறைச்சாலைக் கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படும் என்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.விஸ்வநாதன் தெரிவித்தார்.

கைதிகள் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ். சிறைச்சாலையில் இடம்பெற்ற தமிழ்-சிங்கள புத்தாண்டு விளையாட்டு நிகழ்வின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.எஸ்.பி.பெரேரா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி செய்யக்கூடிய மண்டபவசதிகளும் உங்களது நல்ல ஆற்றல்களை வெளிக் கொண்டு வரக்கூடிய கலை, கலாசார, மொழி சம்பந்தமான விரிவுரைகள், கருத்துப் பரிமாறல்கள் போன்றன ஒழுங்கு செய்து அந்தந்தத் துறையில் பிரபல்யமானவர்களின் துணையுடன் உங்களது எதிர்காலத்தை ஒளிமயமான தாக்கிக் கொள்ளவேண்டும். உங்களுக்கான தொழிற் பயிற்சி, உங்களது ஆசைகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கும் வசதியாக இந்த புதிய கட்டடம் அமையப் பெற்று திறக்கப்படும். அனைத்து அடிப்படை வசதிகளைக்கொண்ட புதிய கட்டடத் தொகுதி விரைவில் திறக்கப்படும். இவ்வாறான விளையாட்டு, மற்றும் கலை நிகழ்வுகளின் மூலம் நல்லெண்ணமும் நற்சீலமும் ஏற்படவேண்டும் இதன் மூலம் சமுதாயத்தில் உயர்வானவர்களாக திகழவும் முடியும் என்றார். (இ)

# உரிய நேரத்திற்கு திறக்காத சிற்றுண்டிச்சாலையால் அவலம்

தென்மராட்சி பிரதேச மக்களிற்கு மிகவும் முக்கியமானதாக சாவகச்சேரி வைத்தியசாலை விளங்குகின்றது. இவ் வைத்தியசாலையில் பல்வேறு வகையான நோய்களிற்கும், சிகிச்சை பெறுவதற்கு வரும் நோயாளிகள், அவர்களைப் பார்வையிடவரும் உறவினர்கள் என பலநூற்றுக் கணக்கில் பொதுமக்கள் வந்து செல்கின்றனர்.

இவ் வைத்தியசாலையில் இயங்கும் சிற்றுண்டிச்சாலை காலை 6.00 மணியின் பின்பே திறக்கப்படுகின்றது. வைத்தியசாலையில் தங்கிநின்று சிகிச்சை பெறுபவர்கள் தமது தேவைக்கு சுடுதண்ணீர் எடுப்பது மற்றும் சிற்றுண்டிகள் வாங்க வெளியே செல்வதனைக் காண முடிகின்றது. நோயாளிகள் வெளியே செல்வது என்பது இயலாத காரியம் தமக்கு உதவிக்கு வந்தவர்களையே பொருட்களை வாங்க அனுப்பவேண்டும்.

வைத்தியசாலையில் தங்கி நிற்கும் உதவியில்லாத நோயாளிகள் காலைவேளைகளில் சுடுதண்ணீர் பெறுவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே வைத்தியசாலை நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுத்து அதிகாலை 5.00 மணிக்காவது சிற்றுண்டிச்சாலையை திறந்து நோயாளர்களின் சிரமங்களை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பலரும் கோரிக்கை விடுகின்றனர்.(130)

# கால்நடைகளின் தொல்லை; விபத்துக்கள் ஏற்படுவதாக விசனம்

(கல்வயல்)

நுணாவில் சந்தியிலிருந்து உட்புறமாக பருத்தித்துறை வீதியில் பொலிஸ் விடுதிக்கு முன்பாக மற்றும் வீதிகளில் பெருமளவு கால்நடைகள் தமது இரவுப் பொழுதைக் கழிக்கின்றன.

இவ்வாறாக இக் கால்நடைகள் பகல் வேளையிலும் கட்டாக்காலியாகத் திரிந்தாலும் இரவில் தமது உறைவிடமாக குறித்த வீதியினையே கொண்டுள்ளன.

இதனால் அப்பகுதியில் பயணம் செய்யும் வாகனங்களின் வெளிச்சம் அக் கால்நடைகளில் படும் போது அவை பயத்தினால் திடீரென எழுந்து ஓடமுயற்சிக்கின்றன.

இதனால் விபத்துகள் ஏற்படுவதாக பயணிகள் பலரும் அச்சம் தெரிவிப்பதோடு இக் கால்நடைகள் கட்டாக்காலியானவை இல்லை எனவும் குறைகூறுகின்றனர்.

மேலும் இக் கால்நடைகள் அப்பகுதி மக்களது பிராணிகளாக இருப்பதோடு அவற்றில் சில சிறு சிறு கயிறுகளுடனும் வீதியில் உலவுகின்றன. இதனால் துவிச்சக்கர வண்டி மற்றும் உந்துருளி போன்றனவும் விபத்துக்குள்ளாகும் வாய்ப்புகள்அதிகரிப்பதாக, சாரதிகள் மற்றும் இவ்வீதியில் பயணிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர்.

கால்நடைவளர்ப்போர் தமது கால்நடைகளை கட்டி வளர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோருகின்றனர். (43)

# புதிய நிர்வாகத்தெரிவு

(கரணவாய்)

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் கற்பகநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக திருமால்கரன், செயலாளராக சி. கெங்காதரன், உபதலைவராக இ.கருணாகரன் பொருளாளராக மா.ஜெகஜோதி, உபசெயலாளராக ம.நிரோஜன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக த.கணேசமூர்த்தி வே. திவாகரன், செல்வமோகன், சி.பாலமுரளி, ந.கிருஷ்ணகுமார் து.தவராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (18)

# இந்திய விதை வெங்காயம் குடாநாட்டில் விநியோகம்

(வடமராட்சி)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட நல்லின சின்னவெங்காய விதைகளை யாழ். குடா விதை உற்பத்திகூட்டுறவுச்சங்கம் குறைந்த விலைக்கு வழங்கிவருகின்றது.

இவ்வருடம் வெங்காயப்பயிர்கள் நாசமடைந்து விதைவெங்காயத்திற்கு த்தட்டுப்பாடேற்பட்டுள்ள இன்றைய நிலையில் யாழ். குடா விதைஉற்பத்திக்கூட்டுறவுச்சங்கம் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட நல்லின சின்னவெங்காய விதைகளை குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு வழங்கிவருவது விவசாயிகளுக்கு பேருதவியாக இருப்பதாகத் தெரிவித்துள்ள விவசாயிகள் யாழ்.குடாவிதை உற்பத்திகூட்டுறவுச் சங்கத்திற்கு நன்றியும் தெரிவித்துள்ளனர்.

யாழ். குடா விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்கு நல்லின பாகல் விதை, வெண்டிவிதை, புடோல்விதை, பயிற்றை விதை ஆகியவற்றையும் குறைந்த விலைக்கு வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# வருடாந்த மஹோற்சவம்

(வேலணை)

ஊரெழு அருள்மிகு சிவபூரணி காளி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 18ஆம் திகதி வசந்த உற்சவமும் 20ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 22ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 23ஆம் திகதி இரதோற்சவமும்,24ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கின்றன. (05)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 150 | திகதி 2013.05.03 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

19 33 36 62 W

பரிசுத் தொகை ரூபா. 16,290,320/- வெல்லப்பட்டுள்ளது

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | - | - |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 06 | 300,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 180 | 180,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 303 | 303,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8031 | 481,860/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4399 | 175,960/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 105401 | 2,108,020/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 15111 | 302,220/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 16,290,320/- | 01 | 16,290,320/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 20,141,380/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 10,000,000/-

2013.05.07ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும். நியத்த ஜய

வளமான வாழ்வித்தி

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47 web : www.dlb.lk
(C/2739)



## சிறுவிளம்பரங்கள்

### வீடு விற்பனை

நல்ல சுற்றாடலில் ஒரு காணியிலுள்ள சகல வசதிகளும் கொண்ட இரண்டு வீடுகள் தனித்தனியாகவோ, ஒன்றாகவோ விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்: காலை 12 மணி வரையும், மாலை 3 மணிவரையும்.

தொடர்பு: க.சீவறட்ணம் (சிவராசா), றியிஸ்ரார் சம்பந்தர் லேன், சுதுமலை (R/181)

### விற்பனைக்குண்டு

அரைக்கும் ஆலைக்குரிய இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு (நெல் அவிக்கும் ராங்க்) தொடர்புக்கு :- 077 380 6132 (R/1317)



திருமறைக்கலாமன்றம் யுனிசெவ் அனுசரணையுடனும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பங்களிப்புடனும் செயற்படுத்தி வரும் அரங்க செயற்பாடுகள் ஊடாக இளைஞர்களை வலுப்படுத்தல் செயற்திட்டத்தின் ஒரு அங்கமாகத் தெரிவு செய்யப்பட்ட துனுக்காய்ப் பிரதேச கோட்டைகட்டியகுளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் கழகத்திற்கும் கரைத்துறைப்பற்று பிரதேச முள்ளியவளை இளைஞர் கழகத்திற்கும் இசைக்கருவிகள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையம் காணலாம். (27)

# கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு பிரதேச மக்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-உருத்திரபுரம், கூழாவடிப்பகுதியில் சட்டவிரோதமாகக் கசிப்பு விற்பனை அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தாம் பல சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மேற்படி கூழாவடிப்பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் இரகசியமான முறையில் வைத்து விற்பனை செய்யப்படுவதாகவும், வெளியிடங்களில் இருந்து மதுப்பிரியர்கள் இங்கு வந்து வாங்கி அருந்தி விட்டுச்செல்வதாகவும், சில சைக்கிள்க்கடைகளிலும் இவ்வியாபாரம் நடைபெறுவதாகவும் அறியமுடிகிறது.

இந் நடவடிக்கையால் வறுமை நிலையில் உள்ள குடும்பங்கள் பாதிக்கப்படுவதுடன், மாணவர்களின் கல்வி செயற்பாடும் இதனால் பாதிக்கப்படுகிறது. இதனைத் தடுத்து நிறுத்த உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (15)

# பிள்ளைகளின் கல்வித்துறையில் பெற்றோர்களின் அக்கறை மிக அவசியம்

## வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது கட்டாயமாகும். இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஆரம்பக்கல்வி கட்டாயமானதாகும். சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லும்போது அங்கு பல்வேறு விடயங்களையும் அறிநது கொள்கின்றனர் என யாழ். பலகலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைதது அவர்களுக்கான உதவிப்பொருட்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று வளர்ந்த பிள்ளைகள் ரியுட்டறிகளிலும், தினசரிப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற தொடர்பாடல் ஊடகங்களிலும் கல்வியைப் பெறுகிறார்கள்.

அதேபேல் சில மாணவர்கள் வீட்டிலும் கற்கிறார்கள். ஆரம்பப்பிரிவு மாணவர்கள் இவ்வாறு கல்வி கற்பதில்லை. எனவே, பெற்றோர் ஆரம்பப் பிரிவு மாணவர்களைக் கட்டாயம் பாடசாலைக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

யுத்தத்தினால் எமது பிள்ளைகளின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் தாக்கம் காரணமாகவே இன்று பாடசாலைகளை விட்டு சிறுவர்கள் வெளியேறுகிறார்கள். இதனைத் தடுத்து எல்லாப்பிள்ளைகளுக்கும் பாடசாலைக் கல்வி கிடைக்கச் செய்யவேண்டும்.

பாடசாலைகள் எமது வீடுகளுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு இலவச உணவு, இலவச பாடநூல், இலவச சீருடை என்பன கிடைக்கின்றன. இதேபோன்று பல்வேறு உதவிகளை அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள், தனவந்தர்கள், நலன்விரும்பிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். இவற்றைப் பெற்றுப் பிள்ளைகள் கல்வியில் முன்னேறவேண்டும் எனத் தெரிவித்தார். (10)

# கிளி. கந்தசுவாமி ஆலயத்தில் இராஜகோபுரம் அமைக்க ஏற்பாடு

(யாழ்.நிருபர்)

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இராஜகோபுர திருப்பணி வேலைகளுக்கு அனைவரும் பூரணமாக ஒத்துழைத்துப் பல்வேறு வழிகளிலும் உதவ முன்வரவேண்டுமென கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் வேண்டுகோள் விடுத்தார்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் ஸ்ரீகௌரிபாலா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதம விருந்தினர் தொடர்நது உரையாற்றுகையில்,

இந்த இராஜகோபுரம் கிளிநொச்சி நகரில் அடையாளச் சின்னமாகவும், மாவட்டத்தில் முதலாவது இராஜகோபுரமாகவும் இங்கு நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு சிறப்புக்களும் பழமையும் மிக்க இவ்வாலயம் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சைவத்தின் பெருமையைப் பறைசாற்றும் இவ் ஆலய வளர்ச்சிக்கு அனைவரும் உதவ முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் கே.திருலோகமூர்த்தி, இ.புவனேந்திரன், எஸ்.பத்மநாதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (10)

# பரராசசேகரப்பிள்ளையார் ஆலய இரதோற்சவம்

(இணுவில்)

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் நாளை செவ்வாய்க் கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (85)

# துவாரகமயி பாபாவின் விக்கிரகம் பிரதிஷ்டை

(வடமராட்சி)

இலங்கையில் முதன்முதலாக 'துவாரகமயி பாபா'வின் விக்கிரகம் நல்லூர் சீரடிசாயி மந்திரில் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் செய்து வைக்கப்படவுள்ளது.

இதற்காக இந்தியா சீரடியிலிருந்து சுவாரகமயி பாபாவின் விக்கிரகம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது.

இந்த துவாரகமயி பாபா விக்கிரகம் எதிர்வரும் 28 ஆம் திகதி நல்லூர் சீரடிசாயி மந்திரில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

மறுநாளான 29 ஆம் திகதி காலை 6.00 மணிமுதல் முற்பகல் 11.00 மணிவரை துவாரகமயி பாபாவுக்கு பக்த அடியார்கள் பால்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

நண்பகல் 12.00 மணிக்கு துவாரகமயி பாபாவுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும். குபபாபிஷேகத்தைத் தொடர்நது விசேட பூசைகள், ஆராதனைகள் இடம்பெறுமென சீரடி பாபா சாயி மந்திர் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (01)

# சுகாதார சீர்கேடான தேவரையாளிக்குளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மடம் வீதியில் அமைந்துள்ள தேவரையாளிக்குளமானது மக்கள் பாவனைக்குதவாத நிலையில் மாசடைந்து காணப்படுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றன.

நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக்காணப்படுவதாகவும், இதனால் பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். அத்துடன், இந்தக்குளத்தின் அருகே காணப்படும் மலசலகூடமும் பழுதடைந்து, பயன்படுத்தமுடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (75)



கிளிநொச்சி மாவட்டத்திற்கான சமூக சேவைகள் அமைச்சினால் மாற்றுவலுவுள்ளோர் தொடர்பான மாவட்ட சுய உதவிக் குழு கடந்த வியாழக்கிழமை அமைக்கப்பட்டது. மேலதிக அரசாங்க அதிபர் செ.சிறிநிவாசன் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் கிறிஸ்ரி பெர்ணான்டோ, வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் பங்குபற்றினர். (90)

# வங்கிக் கிளைகள் இல்லை சிரமப்படும் பொதுமக்கள்

(வடவரணி)

வரணிப் பிரதேசத்தில் வங்கிகள் (கிளைகள்) இல்லாததால் அப்பகுதி மக்கள், கொடிகாமம், நெல்லியடி, பருத்தித்துறை போன்ற பகுதிகளுக்கு சென்று தமது வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் வீண்பணச் செலவும், நேரவிரயமும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வயோதிபர்கள் பெரும் சிரமப்பட்டு வங்கிகளுக்குச் சென்று வருகின்ற அதேவேளை, வரணியில் சமுர்த்தி வங்கிக்கிளை ஒன்றுமட்டும் செயற்பட்டு வரும் அதேவேளை சமுர்த்திப் பயனாளிகள் மட்டும் இவ்வங்கியில் சேவையை பெறமுடிகிறது.

எனவே இப்பகுதியில் ஒரு வங்கிக் கிளையாவது அமைக்கப்பட்டால் பொதுமக்கள் பெரிதும் பயன்அடைய வாய்ப்புள்ளதாகஇருக்கும் எனப் பலரும் தெரிவிக்கின்றனர். (150)

வெற்றியின் போது கை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம். பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வாழும் வழி நம்மிடமே உள்ளது!

ஆக்ரோசமான எதிரிகள் போல வெற்றுப் பேச்சுக்களால் சவாலுக்குப் பதில் சவால் விட்டுக் கொண்டிருப்பவர்கள், தத்தம் அரசியல் லாபத்திற்கு ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டிருக் கிறார்கள் என்பதை இப்போது பலரும் சுட்டிக்காட்டத் தொடங்கி யுள்ளனர்.

"உன்னை ஒழிக்காமல் ஓயப் போவதில்லை" என்கிற மாதிரி யான பகையாவேசப் பேச்சுக்களும் அதற்கு எதிர்வினையான சீண்டல்களும், பிறகு வலிந்து இனவாதத் தாக்குதலாக்கி ஒப் பாரி வைத்து அரற்றி உணர்ச்சிக் கடலில் வாக்குகள் அள்ளியெ டுக்கப்படுகின்றன.

கூர்ந்து அவதானிப்பவர்களுக்கு, மக்களை முட்டாள்களாக்கி விட்டு யார் தமக்குள் பரஸ்பர உதவி அரசியலைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது புரியும். இருவர் சண்டை பிடிப் பது போல் நடிக்க, சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருக்கும் மக் களிடம் பணப்பைகளை அபகரித்துக் கொள்ளும் திருட்டுப் போன்றதுதான் இது.

தமிழ்த் தீவிரத் தேசியர்களின் அரசாங்கத்திற்கெதிரான படையினருக்கெதிரான வீரவசனங்களும் போராட்டங்களும் அண் மைக்காலத்தில் சற்று மிகையாகியிருப்பதைப் பார்த்த அனுப வஸ்தர் ஒருவர் இவ்வாறு சொன்னார்: இவர்கள் சீறுவார்கள் பதிலுக்கு அவர்களும் இவர்களைச் சீண்டுவார்கள். இவர்கள் உடனே உலகத் தமிழினமே இழிவுபட்டதாக உணர்ந்து துடித் துப் போகும்படியாக ஓங்கிக் குரலெடுப்பார்கள். ஏதோ தேர்தல் வரப்போகிறது என்பதற்கான கட்டியம் அது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் அவ்வளவுதான் என்றார் அவர்.

இனங்களுக்கிடையே மக்களுக்கிடையே கசப்புகளையும் உரசல்களையும் பேணுவதன் மூலம் தங்கள் தங்கள் அரசியல் ஆதாயங்களோடு திருப்திப்பட்டு விடுகிறார்கள். மாறாக, மக்க ளுக்கு நல்லது ஏதாவது நடக்க வேண்டுமானால், பகை மறந்து கசப்புகள் விலகுவதையே நாம் ஊக்கியாக வேண்டும்.

தவறுகள் நடந்ததை ஒப்புக்கொள்வதும், அவற்றுக்கான பிரா யச்சித்த நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதுமே இனங் களுக்கிடையே உருவாகிவிட்டிருக்கும் கசப்புகளை அகற்றும் வழி யாகும். இரு பக்கமிருந்தும் அதற்கான இணக்கங்களை உரு வாக்கவே எதுவும் பேசப்பட வேண்டும்.

நல்லிணக்கம் உருவாக வேண்டும் என்று விருப்பப்படுகிற வர்கள் – மற்றவர் தவறுகளைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருப்ப தற்குப் பதிலாக முதலில் அவரவர் தத்தம் தரப்பிலுள்ள தவறு களை எடுத்துச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொள்ள முன்வரு தல் வேண்டும்.

நாம் நேரிடையாகச் செய்யாத குற்றங்களுக்கு நாம் பொறுப் பில்லை என்று இருந்துவிட முடியாது. குற்றம் நடந்த போது கண்டிக்காமல் இருந்தது, அல்லது அவற்றை அறிந்து கொள்ளா மல் இருந்தது, அவையெல்லாம் நம் விடுதலைக்கும் சுதந்திரத் திற்குமாகச் செய்யப்படும் அவசியங்கள் என்று விபரிக்கப்படு வதை மறுத்துப் பேசாமலிருந்தது கூட எல்லாமே குற்றத்திற்கு உடந்தையாக இருந்தமைதான் என்று புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

கொலைகள், அழிவுகள் எல்லாவற்றையும் அற–அழிப்பு, நியாயமிழப்பு, மனித அவலம், சமூகச் சிதைவு என்ற நிலையில் எல்லாவற்றுக்கும் நம் தரப்பிலும் காரணங்களை ஏற்றுக்கொண்டு, அங்கீகரித்துக்கொண்டு வருத்தத்தைப் பகிர வேண்டியிருக் கிறது.

நாம் வாயிலும் வயிற்றிலுமடித்து முழங்கிக் கொண்டிருக்கிற நம் பிரச்சினைகளை வேறு யாரும் வந்து தீர்க்க முடியாது. என்ன செய்ய வேண்டும் என்று நம்மையேதான் நாம் கேட்டாக வேண் டும். பிழைகள் எல்லாம் எதிரியிடம் இருக்கிறது என்று சொல் லிக் கொண்டிருப்பதல்ல; வழி நம்மிடம் இருக்கிறது என்பதை உணர்ந்து செயற்படுவதன் மூலமே எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

- ஆசிரியர்

### பல்கலையில் அரசியல் நியமனம்

# அம்பலப்படுத்த தயாராகும் பேராசிரியர் ஒன்றியம்

பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றில் செய்யப்பட்டுள்ள அரசியல் நிய மனங்கள் தொடர்பில் அம் பலப்படுத்தத் தயார் என பல் கலைக்கழக பேராசிரியர் ஒன்றி யம் அறிவித்துள்ளது.

அரசியல் காரணிகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட வர்களின் பெயர் விபரங்களை வெளியிடத் தயார் என பல் கலைக்கழக பேராசிரியர் ஒன்றி யத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித்தேவ்சிறி தெரிவித் துள்ளார்.

பல்கலைக்கழக முறைமை கடந்த நான்கு ஆண்டுகளாக கடுமையாக அரசியல்மயப்படுத் தப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் மற்றும் பிரதித் துணை வேந்தர் பதவிகளுக்கான நியமனங் களை உதாரணமாக சுட்டிக் காட்ட முடியும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக முறைமை யில் நிலவிவரும் அரசியல் மயப்படுத்தல்கள் அம்பலப் படுத்தப்பட வேண்டியது அவசி யமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசியல் தலையீடுகள் கார ணமாகவே அதிகளவான புத்தி ஜீவிகள் நாட்டை விட்டு வெளி யேறிச் செல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கு கடல் கொந்தளிக்கும்; மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

முல்லைத்தீவுக்கு கிழக்கே சூறாவளி ஏற்படுவதற்கான காற்றழுத்த தாழ்வு மண்டல மையம் கொண்டுள்ளதாக காலநிலை அவதானநிலையம் அறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள மகாசேன் சூறாவளி முல்லைத்தீவில் இருந்து சுமார் 800 கிலோமீற்றர் தொலைவில் நிலை கொண் டுள்ளது.

இதனால் யாழ்ப்பாணம் உள் ளிட்ட வடமாகாணத்தின் பல கடற்பகுதிகள் கொந்தளிப்பா கக் காணப்படும் என்று கால நிலை அவதான நிலையம் தெரி வித்துள்ளது.

இதனால் மீனவர்களை கட லுக்குச் செல்லவேண்டம் என் றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## வலிகாமம் கல்வி வலயத்தால் தொழில்சார் வேலைத்திட்டம்

(வலிகாமம்)

வடமாகாணக் கல்வித் திணை க்களத்தின் அறிவுறுத்தலிற் கேற்ப வலிகாமம் கல்வி வலயப பாடசாலை மாணவர்களுக்கான. தொழில்சார் வழிகாட்டல் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசா அறிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டத்திற்கு என வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள IC வகை II, பாடசாலைகளைக் கொண்ட 48 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கான ஒவ் வொரு பாடசாலைகளுக்கும் 14 ஆயிரம் ரூபா வீதம் மொத்த மாக 672,000 ரூபா நிதி எல்லாப் பாடசாலைகளுக்கும் விடுவிக் கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்த நிதியினை ஒவ்வொரு பாடசாலையும் தங்களின் பாட சாலை அபிவிருத்திச் சங்க நிதிக்கணக்கில் வைப்பிலிட்டு மாகாணக் கல்வித் திணைக்க ளம் அறிவுறுத்தியுள்ள செலவு மதிப்பீட்டு வைப்பை செலவு செய்து அறிக்கை சமர்ப்பிக் கப்படவேண்டும் எனத்தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதி பர்களுக்கு அறிவுறுத்தப்பட் டுள்ளது.

இந்த நிதியினைப் பயன்படுத் தத் தெரிவு செய்யப்பட்ட பாட சாலைகள் தங்கள் மாணவர் களின் தொழில் வழிகாட்டல், உளநலம் கல்விசார் செயற்திட் டங்களை முன்வைக்க வேண்டும்.

தரம் 6 -11 வரையான மாண வர்களுக்கு இத் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்படி செயற்திட்டங்களை உதவிக் கல்விப் பணிப்பாளர், சேவைக்கால ஆசிரிய ஆலோ சர்கள் மூலம் மேற்பார்வை செய்து தகுந்த ஆலோசனை களை வழங்கவேண்டும் எனவும் மாகாணக் கல்வித் திணைக்க ளத்தினால் அறிவுறுத்தப்பட்டுள் ளது. (06)

## தவறிழைத்த சாரதிகளின் பட்டியல் தயாரானது

மதுபோதையில் வாகனங்களை செலுத்திய சாரதிகள் மற்றும் உயிர் ஆபத்துக்களை ஏற்படுத்திய சாரதிகள் 8 ஆயிரம் பேர் தொடர பான தகவல்கள் பட்டியலிடப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. நீதிமன்றம் மற்றும் பொலிஸாரினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய, குறித்த நபர்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, உரிய புள்ளிகள் கிடைத்ததன் பின்னர் சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, குடிபோதையில் வாகனங்களைச் செலுத்திய சாரதிகள் மற்றும் உயிர ஆபத்துக்களை ஏற்படுத்திய சாரதிகளுக்கு புள்ளி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், சிறு தவறுகளுக்கான புள்ளிகளை வழங்கும் திட்டமொன்றை 6 மாதங்களின் பின்னர் நடை முறைப்படுத்தப்படவுள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் எஸ்.எச். ஹரிச்சந்திர மேலும் தெரிவித்துள்ளார்.

## கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு அன்பளிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு அம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்விகற்கும் வறு மைக்கோட்டின் கீழ் வாழும் 25 மாணவர்களுக்கு நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகம் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங் கியுள்ளது.

பாடசாலைகளுக்கு ஒழுங்காக சமூகமளித்து மிக ஆர்வமுடன் கல்விகற்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட 25 பேருக்கு இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டன.

பாடசாலை அதிபர் எஸ்.பரமேஸ்வரன் தலை மையில் நடைபெற்ற நிகழ்வில் லயன்ஸ் கழக உறுப் பினர்களாக யு.பற்றிக்ஸ், எம்.லோகசிங்கம், பீ.நிர் மலன், எஸ்.கோகுலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகர ணங்களை வழங்கிவைத்தனர். (01)

## இளைஞர் நாடாளுமன்றிற்கு யுவதி ஒருவரும் தெரிவு

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேசத்திலிருந்து இளைஞர் நாடாளுமன்றத்திற்கு செல்வி சர்மிளா தேவராஜா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இவ் இளைஞர் நாடாளுமன்றத்தேர்தல் பருத் தித்துறை பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் த.ஜெயசீலன் கண்காணிப்பில் நடைபெற்றது.

இங்கு இடம்பெற்ற இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட சாரங்கா சண்முகராஜா 32 வாக்குகளையும், குணம் சத்தியகிருபன் 31 வாக குகளையும் பெற்றுக்கொண்டனர்.

இத்தேர்தல் முடிவின்படி பருத்தித்துறை பிரதேசத்திலிருந்து இளைஞர் நாடாளுமன்றத் திற்கு சர்மிளா தேவராஜா தெரிவு செய்யப்பட் டுள்ளார். (01)

**நான் ஒரு மனித உரிமை ஆர்வலராகவோ அல்லது இலங்கை பற்றி ஜெனிவாவில் பிரசாரம் மேற்கொள்ளும் ஒரு இராஜதந்திரியாகவோ இருக்கும் பட்சத்தில் அசாத் சாலியின் கைது எனக்கு வெறும் வாயை மெல்லுபவனுக்கு அவல் கிடைத்ததை போல இருந்திருக்கும். மாறாக நான் இன்னமும் இலங்கையின் தூதுவராக அல்லது ஜெனிவாவில் உள்ள ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதியாக இருப்பின், கடுமையான இராஜதந்திர முயற்சி மற்றும் தார்மீக நெறிமுறை சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டி இருந்திருக்கும்.**



# நீதி மற்றும் நியாயமான நடவடிக்கை எங்கே?

**தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து**

நிச்சயமாக சிறுபான்மையினரிடத்தில் இருந்து வெளிப்படும் அடிப்படைவாத தூண்டுதல் பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்வதைப்போல, பல்வேறுவிதமான அடிப்படைவாத தூண்டுதல்களை மேற்கொள்ளும் பெரும்பான்மை இனத்தவர்களிடமும் பாரபட்சமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாரபட்சமற்ற, மற்றும் நீதியான தன்மைகள் உள்ள ஒரு சமநிலை இல்லாதபோது, அசாத் சாலியின் கைது மற்றும் அவரது தடுப்புக்காவலுக்கான நிபந்தனைகள், என்பனவற்றை கவனத்தில் கொள்ளும் உலகத்தின் கண்கள், இந்த அரசாங்கத்தை மற்றும் மிகவும் முக்கியமாக இல்ங்கை தேசத்தை எந்த விதமாக பார்க்கும்? அசாத்தை கைது செய்தது எதற்காக, அவர் துணிவுடன் திருப்பி பேசி, விவாதித்தபடியாலா? அவர் வீறாப்பாக பேசும் ஒரு விடுதலை வீரராக இருக்கிறபடியால் அவருக்கு ஒரு பாடம் புகட்டவேண்டிய தேவையினாலா? பல விடயங்களை தெளிவாக மற்றும் வெளிப்படையாக பேசும் ஒரு இளம் முஸ்லிமாக அவர் இருப்பதால், சிறுபான்மை இனத்தவருக்கு ஒரு உதாரணமாக இருக்கும்படியும், சிங்கள மேலாதிக்கத்தின் வாயை அடைப்பதற்கான இலஞ்சமாக சிங்கள மேலாதிக்கத்தின் பலிபீடத்தில் அவர் பலி கொடுக்கப்படுகிறாரா?

நான் ஒரு மனித உரிமை ஆர்வலராகவோ அல்லது இலங்கை பற்றி ஜெனிவாவில் பிரசாரம் மேற்கொள்ளும் ஒரு இராஜதந்திரியாகவோ இருக்கும் பட்சத்தில் அசாத் சாலியின் கைது எனக்கு வெறும் வாயை மெல்லுபவனுக்கு அவல் கிடைத்ததை போல இருந்திருக்கும். மாறாக நான் இன்னமும் இலங்கையின் தூதுவராக அல்லது ஜெனிவாவில் உள்ள ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதியாக இருப்பின், கடுமையான இராஜதந்திர முயற்சி மற்றும் தார்மீக நெறிமுறை சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டி இருந்திருக்கும். இந்த வருடம் ஜெனிவாவில் எங்களுக்காக வாக்களித்த 13 அங்கத்துவ நாடுகளில், ஏழு நாடுகள் இஸ்லாமிய கூட்டு அமைப்பை (ஓ.ஐ.சி) சேர்ந்தவைகள். அந்த முஸ்லிம் பல சேனாக்கள்தான் (இதை நான் ஹலால் என்றுதான் சொல்லவேண்டும்) இலங்கையை காப்பாற்றின, சிங்களவர்கள் மற்றும் சிங்கள பௌத்தர்களுக்கு இந்தமுறை இது ஒரு அவமானகரமான தோல்வியாக இருந்தது. அந்த ஆதரவு இல்லாவிட்டால் எங்களுக்கு வெறும் 6 வாக்குகள் மட்டுமே கிடைத்திருக்கும், இது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சிரியாவுக்கும் மற்றும் தலையீட்டுக்கு முன்னர் லிபியாவுக்கு கிடைத்ததை விடவும் குறைவான வாக்குகளாக இருந்திருக்கும். எங்களுக்கு சார்பாக வாக்களித்த அதே வேளை, இலங்கையில் நடைபெறும் முஸ்லிம்கள் எதிர்ப்பு அச்சுறுத்தல்கள், மற்றும் நிர்ப்பந்தங்கள் பற்றி ஓ.ஐ.சி ஜெட்டாவில் ஒரு அரசியல் நடவடிக்கைகூட நடத்தியது, அதே வேளை கொழும்பிலிருந்து இயங்கும் ஓ.ஐ.சி யின் தூதுவர்கள் ஜனாதிபதியையும் சந்தித்திருந்தார்கள். மார்ச் 2014இல் ஓ.ஐ.சி வாக்குகள் எப்படி அளிக்கப்படும்?

இதற்கிடையில் அசாத் சாலி இங்கு பிரதான் நீரோட்டத்தில் உள்ள ஒரு அரசியல்வாதி, ஒரு முன்னாள் கொழும்பு உதவி மேயர், ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் அவர் இருக்கும் புகைப்படம் ஜனாதிபதியுடன் பரஸ்பர நெருக்கமும், அரவணைப்பும், உள்ள ஒரு மனிதர் அவர், என்பதைக் காட்டுகிறது. அவருக்கு அருகில்கூட ஒரு துப்பாக்கி ரவையோ அல்லது ஒரு ஆயுதமோ கூட இல்லாமல் அல்லது வன்முறைக்குத் துணை போகும் ஒரு நடவடிக்கையை கூட அவர் மேற்கொள்ளாதபோது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவர் தடுக்கப்பட்டுள்ளார். பயங்கரவாத தடைச் சட்டம் வெகு துல்லியமாக கூறுவது, துல்லியமாக பயங்கரவாதத்தை தடுப்பது என்று.

அசாத் சாலி ஆயுதம்தாங்கிய பயங்கரவாத குழு ஒன்றின் நிறுவனராக, தலைவராக, அங்கத்தவராக, ஆதரவாளராக அல்லது அனுதாபியாக இருந்தாரா? ஆயுதம் இல்லாத பயங்கரவாத குழுக்கள் கிடையாது என்று சொல்லப்படுகிறது. அவர்கள் ஆயுதம் வைத்திருக்காவிட்டால், அவர்கள் பயங்கரவாதிகள் இல்லை அல்லது இன்னமும் பயங்கரவாதிகளாக மாறவில்லை. குழு ஒன்றை நிறுவுவதை பரிசோதிக்க அவர் திட்டமிட்டிருந்தாரா? அப்படியானால் எது, எப்போ, எங்கே?

அசாத்சாலி சொன்னவற்றாலோ அல்லது செய்ததின் விளைவாக ஏதாவது வன்முறை நடவடிக்கைகள் இடம்பெற்றனவா? அப்படியானால் என்ன, எது, எப்போ, எங்கே? சாலியினால் ஏதாவது குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது ஏன் பொதுக்களத்தில் வைக்கப்படவில்லை? ஏன் அது இரகசியமாக மறைக்கப்பட்டுள்ளது? நாட்டிலுள்ள சாதாரண சட்டங்களால் ஏன் சாலி குற்றம் சாட்டப்படவில்லை?

அவரது குடும்பத்தினர், வருகையாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் அவரை சந்திப்பதற்கு தடங்கலற்ற வழிமுறைகள் அவருக்கு ஏன் வழங்கப்படவில்லை?

சென்னையிலுள்ள ஒரு பிரசுரத்துக்கு (ஆனந்தவிகடன்), ஏன் ஆர்வலர்கள் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் அசாத் சாலி மட்டும் மீறி விவேகமற்ற சில குறிப்புகளைக் கூறினார், என்று வைத்துக் கொள்வோம், பிரச்சினைக்குரிய பிரசுரமான ஜூனியர் விகடன் மொழிபெயர்ப்பில் சில தவறுகளை விட்டிருந்தாலும்கூட, அதைப்பற்றி கவலையில்லை. அசாத்சாலி சொன்னது எதுவாயிருப்பினும் அதற்கு வெகுஜன ஊடகங்கள் மூலம் தகுந்த பதிலடி கொடுத்திருக்க வேண்டும், மற்றும் அது தொடர்பான விமர்சனமும் திறந்த விவாதமும் நடத்தப்பட்டிருக்க வேண்டும். தவறான அல்லது சமாதானம் சொல்லமுடியாத ஒரு கருத்தை நிச்சயம் மற்றொரு கருத்தினால் மட்டுமே எதிர்க்க முடியும், கைது செய்து 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைப்பதன் மூலம் அல்ல. அது நீங்கள் சாதாரண ஜனநாயக மதிப்புகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றப்படும்போது செய்யப்படுபவை.

எனினும் ஒரு அரசாங்கம் அல்லது தேசம், தவறான ஒரு கருத்து வெளிப்படுத்தலை அல்லது பரிமாற்றத்தை தண்டிக்க அதன் ஆயுதங்களில் ஒன்றாக ஒரு கடுமையான சட்டத்தை பயன்படுத்துவதை தெரிவு செய்யும் போது, அந்த அரசாங்கம் அல்லது தேசம் ஜனநாயகமற்ற எதேச்சதிகாரத் தன்மையுடன் நடந்துகொள்வதாக விமர்சகர்களினால் விமர்சிக்கப்படும் ஆபத்துக்கு தன்னை உட்படுத்திக் கொள்கிறது. அசாத்சாலி சொல்லியவை காரணமாக இலங்கைக்கு ஏதாவது இழிவு ஏற்படுவதைக் காட்டிலும், ஆட்சியினரின் அடக்குமுறை செயற்பாடுகள் அதிக சேதம் விளைவிப்பதுடன், சர்வதேச விசாரணையை தேடுபவர்களுக்கு ஆயுதம் வழங்கி உதவுவது போலவும் ஆகிவிடும்.

அசாத் சாலியின் தடுப்புக்காவல் பயங்கரவாதத்தை தடை செய்ய உதவியதா, அல்லது தீவிரமாதலை எதிர்ப்பதற்கு அது ஏதாவது பங்களிப்பினை நல்கியதா? இந்தக் கேள்விக்கான விடை ஒரு சமூகமாக நாம் வாழும் அனுபவத்தில்தான் தங்கியுள்ளது. 1972இல் டசின் கணக்கான சில இளம் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டார்கள், ஏனெனில் தமிழ் நாடாளுமன்ற அரசியல் தலைவர்களுக்கு தலைமைதாங்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பிரார்த்தனை செய்யும்படி விடுத்த வேண்டுகோளைப் புறக்கணித்து, நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பு பிரகடனத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக அவர்கள் கறுப்புக் கொடிகளைக் காட்டினார்கள்.

இந்த இளைஞர்கள் எந்த வன்முறைச் செயல்களிலும் ஈடுபடவில்லை. ஆனால் அவர்கள் ஐந்து வருடங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள். அவர்கள் கைது செய்யப்பட்ட நேரம் யாழ்ப்பாணத்தில் எந்த ஆயுத இயக்கமும் இருக்கவில்லை. அவர்கள் விடுதலை செய்யப்பட்ட 1977இல், புலிகள் ஆயுத நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தார்கள், அதேவேளை ஈரோஸ் அல்லது கெஸ் என்கிற இயக்கம், லண்டனில் ஆரம்பிக்கப்பட்டு லெபனானில் ஆயுதப்பயிற்சியும் பெற்றது. இதைப்பற்றி யாருக்காவது சந்தேகம் இருக்குமாயின் அவர்கள் கருணா, கேபி, சுரேஸ், சித்தார்த்தன், மற்றும் டக்ளஸ் உடன் இதை சரிபார்த்துக் கொள்ளலாம்.

உண்மையில் தடுப்புக்காவலில் இருந்தவர்கள் இந்த ஆயுத இயக்கத்தை ஆரம்பிக்கவில்லை என்பது வெளிப்படை, ஏனெனில் அந்தச் சமயம் அவர்கள் கம்பிகளுக்கு பின்னால் இருந்ததால் அவர்களால் அதை செய்யமுடியவில்லை. வன்முறையற்ற செயற்பாட்டுக்காக சிறையிருந்த அவர்களது நிலை, இளவயது வேலுப்பிள்ளை பிரபாகரன் போன்ற நிழல் மனிதர்களின், ஆயுத போராட்டத்தை தவிர வேறு எந்த விடயத்துக்கான இடமோ அல்லது அர்த்தமோ கிடையாது என்கிற வாதத்துக்கு வலுவூட்டியது.

இதன்படி நிராயுதபாணியான அரசியல் ஆர்வலர்களை தடுப்புக்காவலில் வைப்பதன்மூலம், ஆயுத வன்முறை மற்றும் பயங்கரவாதத்தை தடுப்பதற்கான எந்த வழியும் பிறக்கவில்லை, ஆனால் உண்மையில் தந்திரோபாயங்கள் மூலம் தமிழ் சிறுபான்மையினரின் அரசியல் மூலோபாயங்கள் தன்னை தீவிரமயமாக்கிக் கொண்டது. அசாத்துக்கு நடந்துள்ள இந்த உபசரிப்பு, கிழக்கு மாகாணத்தில் இருக்கக்கூடிய மனக்குறையுள்ள இளைஞர்கள், மற்றும் நிழல் குழுக்களுக்கு அனுப்பும் சமிக்ஞை என்ன?

# வடக்குத் தேர்தலைக் கண்காணிக்க ஐரோப்பிய ஒன்றியம் தயார்




(கொழும்பு)

வடக்கில் மோதல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தயாராக இருப்பதாகவும், ஆனால் இதுவரை அது குறித்து தம்மிடம் இதுவரை வேண்டுகோள் விடுக்கப்படவில்லை எனவும் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வட மாகாணசபைத் தேர்தலில் கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்துமாறு இதுவரையில் அரசாங்கம் கோரவில்லை என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வட மாகாணசபைத் தேர்தலின் போது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றியத்திடம் இதுவரையில் உத்தியோகபூர்வமாக கோரப்படவில்லை என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி பேர்னாட் சாவேஜ் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த வேண்டுமென அரசாங்கம் கோரினால் அது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வட மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அடிக்கடி பிடிபடும் கஞ்சாப் பொதிகள்; புத்தளத்தில் இது வழமையாகி விட்டதா?

(கொழும்பு)

புத்தளத்தில் அடிக்கடி கஞ்சாப் பொதிகளுடன் கடத்தல் காரர்கள் சிக்கிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அதிகரித்து வருகின்றன.

புத்தளம் - கற்பிட்டி பெரிய அச்சுவெலி கடலில் கேரள கஞ்சா மற்றும் பான்பராக் போதைப் பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவரிடம் இருந்து 57 கிலோ 342 கிராம் கஞ்சாவும் 24610 சிறிய பைக்கற் பான்பராக்கும் மீட்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக நடவடிக்கைகளுக்காக கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# "கிழக்கின் நிழல்" செயற்பாட்டில் பாகிஸ்தானின் பாதாள உலகக் குழுக்கள்

## பாதுகாப்புப் படைகளுக்கு நெருக்கடி

(கொழும்பு)

பாகிஸ்தானின் பாதாள உலகக் குழுக்களின் நிழல் செயற்பாடு கிழக்கில் நடைபெறுவதாக புலனாய்வு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகளில் கடும் போக்குத்தனமை நாளுககு நாள் அதிகரித்து வருகிறது.

பாகிஸ்தான் மாபியா கும்பலொன்று இலங்கையில் இயங்கி வருவதாக அரச புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் கடும்போக்குவாதம் மற்றும் முஸ்லிம் பாதாள உலகக குழுக்களுடன் இந்த மாபியா கும்பல் ஒத்துழைப்பை பேணி வருகின்றது.

அண்மையில் ஜனாதிபதி தலைமையில் பாதுகாப்பு உயர் மட்டத்தினர் நடத்திய கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் கராச்சி நகருடன் நேரடித் தொடர்புகளை சில குழுக்கள் பேணி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்கள் மற்றும் சட்டவிரோத பொருட்கள் நாட்டுக்குள் கடத்தப்படுகின்றன. இதன் மூலம் நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைக்க முயற்சிக்கப்படுவதாக அரச புலனாய்வுப் பிரிவினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சுற்றுலா விசா மூலம் நாட்டுக்குள் பிரவேசித்து இங்கு திருமணம் செய்துகொண்டு முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இவ்வாறான பாகிஸ்தானியர்கள் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறான நடவடிக்கைகளினால் பாகிஸ்தானின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசியல் வானில் மீண்டும் துமிந்த ஒதுங்கிக்கொள்வாரா ஹிருனிக்கா

(கொழும்பு)



சிகிச்சைகளை நிறைவு செய்த துமிந்த சில்வா மீண்டும் அரசியலில் குதித்தமையால் ஹிருனிக்கா ஒதுங்கிக்கொண்டு விட்டாரா என்று பரவலாக பேசபபடுகிறது.

அரசியல் நடவடிக்கைகளில் இருந்து தற்காலிகமாக விலகியிருக்கவுள்ளதாக .ஹிருனிக்கா பிரேமசந்திர அறிவித்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மகளான ஹிருனிக்கா தமது முழு நேர அரசியல் பிரவேசத்துக்கு உரிய உதவிகள் அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தாம் சட்டப்பரீட்சைக்கு தயாராகவுள்ளமை காரணமாகவே அரசியல் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்குவதாக ஹிருனிக்கா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பாரத பிரேமச்சந்திரவின் கொலையில் சந்தேகநபராக குறிப்பிடப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, மீண்டும் கொலன்னாவ தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

# பீரங்கிகளை யாழ். நோக்கி கடத்த மலேசியாவில் கப்பல் கொள்வனவு

## குற்றத்தை ஏற்றுக்கொள்கிறார் ஜெயசுந்தரம்

(கொழும்பு)

அயர்லாந்துக் குடியுரிமை பெற்ற விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பாடசாலைத் தோழர், தீவிரவாதச் செயற்பாடுகளில் தான் ஈடுபட்டதை நேற்று சிறிலங்கா நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஞானசுந்தரம் ஜெயசுந்தரம் என்ற, புலிகளின் தலைவர் பிரபாகரனின் பாடசாலைத் தோழர், 2007 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் புலிகளுக்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இவர் புலிகளுக்கு நிதி சேகரிப்பதில் முக்கியமானவராக விளங்கினார் என்றும், புலிகளின் அனைத்துலக புலனாய்வுப் பிரிவில் செயற்பட்டார் என்றும், குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இவர் சிங்கப்பூர், மலேசியாவிலிருந்து இராணுவ தளபாடங்களைக் கொண்டு செல்வதற்காக கப்பல் ஒன்றை வாங்கியதாக நீதிமன்றத்தில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட இவர், தன்னைப் புனர்வாழ்வுக்கு அனுப்புமாறும், சமூகத்தில் நல்ல குடிமகனாக தன்னால் இணைந்துகொள்ள முடியும் என்றும் கூறியுள்ளார்.

# இலத்திரனியல் பருவச்சீட்டு மாணவர்கள் மத்தியில் அறிமுகம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் இதுவரை பயன்படுத்திய கார்ட்போர்ட் மாதாந்த பருவச்சீட்டுக்குப் பதிலாக 03 இலட்சம் எலக்ட்ரோனிக் கார்ட் பத்திரங்களை இலவசமாக வழங்க போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரயாணத்துக்கான கட்டணம் பஸ் நடத்துனரால் எலக்ட்ரோனிக் மெஷின் இயந்திரத்தால் அறவிடும் முறை அமுலாகுமென போக்குவரத்துச் சபையின் உபதலைவர் எல்.ஏ. விமலரத்ன தெரிவித்தார்.

வெளியில் தெரியாத போதும் உள்பகுதியில் பிள்ளையின் பெயர், வயது, பிரயாணப்பாதை போன்ற தகவல்கள் இதில் இடம்பெறும். இதை வேறு எவருக்கும் கைமாற்ற இயலாது.

காட்பத்திரம் காணாமற் போனால் 200 ரூபா செலுத்தி காட் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

காட்பத்திரத்தில் பணம் முடிந்தால் தொலைபேசிகளைப் போன்று பிள்ளைகள் 'ரீலோட்' செய்து கொள்ளலாம். எதிர்வரும் காலத்தில் எலக்ட்ரோனிக் கார்ட் பத்திரத்துக்காகப் புகைப்படமும் சேர்க்கப்படுமென்று உபதலைவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தில் முதற்கட்டமாக பொரள்ளை ரத்னாவலி மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த 98 பேருக்கு கார்ட் பத்திரங்கள் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (எப்.எம்.)

# தூக்கத்தில் இருக்கும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவர்

(கொழும்பு)



தூங்கிக் கொண்டிருக்கும் அரச நிறுவனங்களின் தலைவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்க நிறுவனங்களைச் சரியான முறையில் நடத்திச் செல்லாத அதிகாரிகளை பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று, பிரதிநிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கலகெதர பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது வேலையில்லாப் பிரச்சினையே அதிகமாக காணப்படுகிறது.

அத்துடன் நாட்டின் அரசாங்க நிறுவனங்கள் முன்னேற்ற கரமான செயற்பாட்டினை முன்னெடுப்பது முக்கியமாகும். இந்த நிலையில் சரியான முறையில் அரசாங்க நிறுவனங்களை வழிநடத்தாத அரச அதிகாரிகளை பதவி நீக்கம் செய்து, அந்தப் பதவிகளுக்கு புதியவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# "ஹலால்" விவகாரம் மீண்டும் சூடு பிடிக்குமா?

## இறுதி அறிக்கை அமைச்சரவைக்கு

ஹலால் சான்றிதழ் விநியோகம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றக் குழு, விரைவில் இறுதி அறிக்கையொன்றை அமைச்சரவையில் சமர்ப்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குழுவிற்கு முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்க தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக உறுப்பினர்கள் இது குறித்து கலந்தாலோசிக்க உள்ளதாக குழுவின் உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், அறிக்கையின் உள்ளடக்கங்கள் பற்றி தெரியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதியாக கூடி ஆராய்ந்து இறுதி அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சவுதியில் விபத்து; இலங்கைப் பெண் மரணம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவின் மதீனா நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த பணிப் பெண்ணொருவர் மரணமடைந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் ஷிதாயத் நகரைச் சேர்ந்த வெள்ளக்குட்டி முஹைதீன் ஜனூபா (வயது 39) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

திருமண வைபவமொன்றிற்கு கடந்த வியாழக்கிழமை சென்றுகொண்டிருந்த போதே இந்த வாகன விபத்து இடம்பெற்றதென்று தங்களுக்கு அறிவிக்கப்பட்டதாக விபத்தில் மரணமடைந்தவரின் சகோதரி வெள்ளக்குட்டி முஹைதீன் ஹஸீனா தெரிவித்தார்

மேலும், இந்த வாகன விபத்தில் ஏறாவூரைச் சேர்ந்த பெண் உட்பட வீட்டு எஜமானியும் அவரது 3 குழந்தைகளும் மரணமடைந்துள்ளனர்.

# வீதிச் சமிக்ஞைகளை தவறாது பின்பற்றுமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள வீதிகள் மற்றும் ஏ-9 வீதிகளில் வீதிகளுக்கான சமிக்ஞைகள் ஒழுங்குமுறைப்படி போடப்பட்டும் அவற்றை ஒரு சில சாரதிகள் மற்றும் பயணிகள் சரியாகப் பின்பற்றாமல் இருப்பதால் ஏனைய பாதைசாரிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக யாழில் பல வீதிகள் காப்பெற் இடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் வீதி சமிக்ஞைகளும் போடப்பட்டுள்ளன.

இருந்தும் சில பயணிகள் பேருந்துக்காக காத்திருக்கும் நிலையில் அவர்கள் பஸ்தரிப்பிடத்தில் நிற்பதில்லை. மரங்களிற்குக் கீழும் பஸ்தரிப்பிடத்திற்கு சற்றுத் தூரமாகவும் நிற்பதால் பேருந்துகள் அவ்விடத்தில் நின்றே பயணிகளை ஏற்றிச் செல்வதாகவும், இதனால் ஏனைய வாகனங்களில் செல்வோரும், பாதைசாரிகளும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மஞ்சள்க் கோட்டு கடவையையும் சில வாகன சாரதிகள் உரியவகையில் கவனத்தில் எடுக்காமல் செல்வதாகவும் இவ்வாறான செயற்பாடுகளாலேயே எதிர்பாராத விபத்துச் சம்பவங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் சாரதிகளும், பயணிகளும் வீதி சமிக்ஞைகளை ஒழுங்கான முறையில் பின்பற்ற வேண்டும் எனவும் இது தொடர்பில் போக்குவரத்துப் பொலிஸாரும் உரிய கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் எனவும் பாதைசாரிகளும், சாரதிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (43)

# தளபாடவசதிகளை பெற்றுத்தரவும்

(அச்சுவேலி)

வளலாய் கலைக்கதிர் சனசமூக நிலையமானது போதிய தளபாடவசதியின்றி இயங்கி வருவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இங்கு இயங்கி வரும் முன்பள்ளிச் சிறார்கள் உரிய தளபாடவசதிகள் இன்றிச் சிரமபப்படுவதுடன், வேறு முன்பள்ளிகளுக்குச் செல்லும் நினையும் காணப்படுகிறது. எனவே உரிய தரப்பினர் இச் சனசமூக நிலையத்திற்கு தேவையான தளபாடவசதிகளைச் செய்து தருமாறு மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (85)

# விளையாட்டுக்கழகத்தால் காணி கொள்வனவு

(வடமராட்சி)

பருத்தித்துறை ஐக்கியவிளையாட்டுக் கழக அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கென விளையாட்டுக்கழகம் 20 இலட்சம் ரூபா செலவில் 2 பரப்புக்காணியைக் கொள்வனவு செய்துள்ளது.

பருத்தித்துறை - தும்பளை வீதியில் திக்கமுனைமைதானத்திற்கு முன்புறமாகவே இக்காணி அமைந்துள்ளது. விளையாட்டுக்கழகத்தின் நிதியுடன் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துள்ள பருத்தித்துறை மக்களும், உள்ளூர் மக்களும் வழங்கிய நிதி உதவியினாலேயே இக்காணி கொள்வளவு செய்யப்பட்டுள்ளது.

இக்காணியில் வெகுவிரையில் ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கான அலுவலகக்கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# கொடியேற்றம்

(அளவெட்டி)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (85)

# இயக்குநர் சபை தெரிவு

(அச்சுவேலி)

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்கத்தின் புதிய இயக்குநர் சபைத்தெரிவு அண்மையில் வைத்திய சாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

டாக்டர் கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தலைவராக டாக்டர். கணேசலிங்கம், செயலாளராக எஸ்.மோகனராஜன், உபதலைவராக தா.சிவலிங்கம், உபசெயலாளராக அ.உமா, பொருளாளராக டாக்டர். கு பத்மராணி, ஆகியோருடன் 8 பேரைக் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இக் கூட்டத்தொடரில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன், கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(15)

# பொதுக்கூட்டம்

(யாழ்.நிருபர்)

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும், கல்லூரி அதிபருமான எம்.எம்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் பாடசாலைப் பழைய மாணவர் சங்கத்தின் யாப்பு சீர்த்திருத்தம், பாடசாலையின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளதால் படசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் தே.அமலன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

# பரத நாட்டிய அரங்கேற்றம்

(யாழ்.நிருபர்)

கொழும்பு நிருத்திய நர்த்தனாலயம் நடனப்பள்ளி இயக்குநர் திருமதி சாந்தி கணேசராஜாவின் மாணவியான சஹானா நந்தகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்திற்குப் பிரதம அதிதியாக யுவகலாபாரதி ஸ்ரீமதி திவ்வியசேனாவும், கௌரவ அதிதியாக கொழும்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி நிர்மலி விக்கிரமசிங்கவும், சிறப்பு விருந்தினர்களாக கலாசூரி வாசுகிஜெயதீஸ்வரன், நாட்டிய கலைமணி யசோதரா விவேகானந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (10)



(முழங்காவில்)

வடக்கின் வசந்தம் திட்டத்தில் ஒரு வருடத்திற்கு முன்பதாக ஜனாபதி மகிந்தராஜபக்சுஷவினால் அடிக்கல் நாட்டப்பட்டு 3 கோடி 30 இலட்சம் ரூபா செலவில் அழகுற நிர்மாணிக்கப்பட்ட பூநகரி பொது வைத்தியசாலை வேலைகள் முடிவுற்று திறப்பு விழாவிற்கு தயாரான நிலையில் உள்ளதைக் காணலாம். (112)

# க.பொ.த.சா/த பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் மங்கையக்கரசி வித்தியாலயத்திலிருந்து க.பொ.த.(சா/த)(2012)) பரீட்சைக்குத் தோற்றிய 14 மாணவர்களுள் 6 பேர் க.பொ.த. உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். அம்மாணவர்கள் பெயர் விபரம் வருமாறு,

தர்மராஜன் நிக்சன் (5ஏ, 2பி, சி, எஸ்), பிரதீப்குமார் சதுர்சிகா (2ஏ, பி, 6சி), சிவகுமார் கலபனா (2ஏ, 4சி, 2எஸ்), ஜெயதீஸ்வரன் சஞ்சீவன் (ஏ, பி, 5சி, 2எஸ்), கருணாகரன் கலைவாணி (ஏ, 2பி, 2சி, 4எஸ்), சிவலிங்கம் கருணிகா (ஏ, பி, 4சி).

# முரசின் இன்றைய பலன்

(13.05.2013 - திங்கட்கிழமை)

**விஜய வருஷம் சித்திரை மாதம் 30 ஆம் திகதி.**
**நட்சத்திரம் மிருகசீரிடம் பிற்பகல் 03.44 வரை. திதி - திருதியை.**
**முற்பகல் 11.35 வரை. இராகுகாலம் 07.24 - 08.54 வரை.**
**சுபநேரம் 11.54 - 01.24 வரை. அமிர்தசித்தம்,**

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | சிறு செயலையும் கவனமுடன் செய்து நற்பலன் பெறுவீர்கள். பொது விஷயங்களில் ஆர்வம். சமூகத்தில் மதிப்பு உயரும். தொழிலில் இடையூறை சரி செய்வீர்கள். வரவு எதிர்பார்த்த அளவில் இருக்கும். பயணத்தினால் இலாபமொன்று வரும். |
| ரிஷபம் | மனதில் இருந்த திட்டம் செயல் வடிவமாகும். வெற்றி பெறும் நம்பிக்கை. சந்தோஷம் உருவாகும். தொழில், அபரிமிதமான வளர்ச்சி. ஆதாய பணவரவு. தாயின் தேவை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு சலுகையும் உயர்வும். |
| மிதுனம் | செயல்களில் சிறு முரண்பாடு ஏற்படலாம். வேலையில் தற்காப்பு நடைமுறை வேண்டும். கழன உழைப்பால் தொழில் வளமாகும். மிதமான பணவரவு. கவனித்து உண்பது நல்லது. வெகுநாள் எதிர்பார்த்திருந்த உதவி கிடைக்கும். |
| கடகம் | பகைமையாளர்களால் நெருக்குதல்? விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். மாற்று உபாயத்துடன் செயற்படுவீர்கள். தொழில், மந்த கதி. சிறு நஷ்டம், சிறு கடன். எதிர்பார்த்த ஒரு வேலை முழவதில் தடங்கல். குடும்பத்தில் சச்சரவு வந்து விலகும். |
| சிம்மம் | கலையும் மனதை ஒருமுகப்படுத்துவது நல்லது. தொழில் வளர அதிக வேலை செய்வீர்கள். வரவுக்கேற்ப செலவு. நலிந்திருந்த உடல்நலம் சீராகும். வாகன பயணத்தில் கவனம். வெளியிலிருந்து வரும் செய்தி கவலை மாற்றும். |
| கன்னி | சிலர் இடையூறு செய்ய முயற்சிப்பர். அறிந்து விலகுவீர்கள். விவேகமுடன் செயற்பட்டு கழன வேலையும் முழப்பீர்கள். தொழில், இலக்கு நிறைவேறும். வரவைவிட, செலவு கூடும். எதிர்காலம் பற்றி தெளிவு வரும். தியானம், வழிபாடு. |
| துலாம் | நண்பருக்கு, புதிய நம்பிக்கையை அளிப்பீர்கள். திட்டமிட்ட வேலைகள் இலகுவாய் முழயும். தொழில் புதிய இலக்கை எட்டும். பணவரவு திருப்திகரம். உடல்நலம் பலம் பெறும். சாந்த குணத்தால் சுற்றத்தார் பிரச்சினை சமாளிப்பீர்கள். |
| விருச்சிகம் | மனதில் அன்பும், கருணையும். சார்ந்த வர்களுக்கு, இயன்ற அளவில் உதவுவீர்கள். கூடுதல் உழைப்பால் தொழில், இலக்கு நிறைவேறும். பண வரவு திருப்திகரமாகும். உத்தியோகத்தர்க்கு பாராட்டு, வெகுமதி. குடும்பத்தினர் பாசம். |
| தனுசு | உங்கள் செயற்திறன் மிகுந்திருக்கும். வெற்றி பெற கிடைக்கும் வாய்ப்பை, கவனமுடன் பயன்படுத்துவீர்கள். தொழில், தொடர்பு பலம் பெறும். பணவரவு திருப்திகரம். நண்பருடன் மகிழ்வு. உடல் குறைகள் தீரும். விருந்துண்டு மகிழ்வீர்கள். |
| மகரம் | செயல்களில் கவனச் சிதறல் ஏற்படலாம். அனுக்கமானவரின் ஆலோசனை கேட்டு நடப்பது நல்லது. தொழில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். இலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு சலுகையும் உயர்வும். வாகன மாற்ற பலன். |
| கும்பம் | இலட்சிய மனதுடன் செயற்படுவீர்கள். தேங்கியிருந்த வேலைகள் முழயும். தொழில், நடைமுறை திருப்திகரமாக இருக்கும். உபரி பணவரவு. பிள்ளைகள் குறித்து இருந்த மனக்குறை தீரும். கலைஞர்க்கு உயர்ச்சி. குடும்பத்தில் மங்கள நிகழ்வு. |
| மீனம் | நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். அனுகுமுறையில் புதிய மாற்றம் பின்பற்றுவீர்கள். திறமைமிகு பணியால், தொழிலில் அபரிமித வளர்ச்சி. கடனில், ஒரு பகுதி தீரும். பொறுப்பான பதவி கிடைக்க அனுகூலம். குடும்பத்தில் மகிழ்ச்சி. |

# கச்சதீவு விவகாரம் குறித்து

# அரசு மறுபரிசீலனை செய்யும்



தமிழகத்தின் ஒட்டுமொத்த கருத்தையும் கவனத்திற் கொண்டு மத்திய அரசு கச்சதீவு விவகாரத்தை மறுபரிசீலனை செய்யும் என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், மத்திய அமைச்சர்கள் அஸ்வனி குமார், பன்சால் ஆகியோர் மீது குற்றங்கள் நிரூ





பணம் ஆகவில்லை. ஆனால் குற்றச்சாட்டுக்கு தார்மீக பொறுப்பேற்று பதவியை ராஜினாமாச் செய்துள்ளனர். இந்தியா, இலங்கை நாடுகளுக்கு இடையே செய்து கொண்ட ஒப்பந்தபடி கச்சதீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்குள்ள கோயில் திருவிழாவின்போது இரு நாட்டை சேர்ந்த பக்தர்களும் கச்சதீவில் ஒன்றாக கூடி விழா நடத்தி வருகின்றனர்.

இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கும் போது கச்சத்தீவில் தங்கி ஓய்வு எடுக்கவும், தங்களது வலைகளை காய வைக்கவும், பழுதுபார்க்கவும் ஒப்பந்தம் வகை செய்கிறது. ஆனால் சமீபகாலமாக இலங்கை, அந்த ஒப்பந்தத்தை சரிவர மதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதற்கிடையே தமிழக சட்டசபையில் கச்சத்தீவை மீட்க வேண்டும் என்ற தீர்மானத்தை முதல்வர் நிறைவேற்றியுள்ளார். திமுக தலைவர் கருணாநிதியும் வழக்கு தொடர்ந்துள்ளார். தமிழகத்தின் ஒட்டு மொத்த கருத்தையும் கவனத்திற்கொண்டு மத்திய அரசு இந்த விவகாரத்தில் மறுபரிசீலனை செய்யும் என்றார்.

## பிரதமர் பதவி விலக வேண்டும்

## அத்வானி வலியுறுத்தல்



சர்ச்சைக்குரிய அமைச்சர்கள் இருவர் பதவி விலகியது போன்று, பிரதமர் மன்மோகன் சிங்கும் பதவி விலக வேண்டும் என அத்வானி வலியுறுத்தியுள்ளார். பிரதமர் மன்மோகன்சிங், பவன்குமார் பன்சால், அஸ்வனி குமார் இராஜினாமா செய்தாக வேண்டும் என்பதற்காக நாடாளுமன்றத்தை எதிர்க்கட்சிகள் முடக்கி வைத்தனர்.

இதனால் 2 நாட்கள் முன்னதாகவே நாடாளுமன்ற கூட்டத் தொடர் முடித்து வைக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் பவன்குமார் பன்சாலும் அஸ்வனிகுமாரும் பதவி விலகியுள்ளனர். இது பற்றி கருத்துத் தெரிவித்த பாஜக மூத்த தலைவர் எல்.கே. அத்வானி, இது மிகவும் காலதாமதமான நடவடிக்கை. இந்தக் கோரிக்கையைத்தான் நாங்கள் நாடாளுமன்றத்தில் முன்வைத்தோம்.

ஆனால் அப்போது இதை பிரதமர் ஏற்கவில்லை. இதனால் நாடாளுமன்றத்தின் மதிப்புமிக்க நேரம் வீணடிக்கப்பட்டுவிட்டது. இத்தோடு பிரச்சினை முடிந்துவிடவில்லை.

சட்ட அமைச்சர் அஸ்வனி குமார், பிரதமரைக் காப்பாற்றுவதற்காகத்தான் சி.பி.ஐ.விசாரணை அறிக்கையில் திருத்தங்களை மேற்கொண்டார்.இதனால் பிரதமர் மன்மோகன்சிங்கும் கட்டாயம் இராஜினாமா செய்தாக வேண்டும். பிரதமர் மன்மோகன் சிங் பதவியில் நீடிப்பதற்கு நியாயம் ஏதும் இல்லை என்றார்.

## பாடகர் சவுந்தரராஜன்

## வைத்தியசாலையில் அனுமதி



பழம்பெரும் சினிமா பின்னணி பாடகர் டி.எம்.சவுந்தரராஜன் கடந்த சில மாதங்களாக உடல் நலக் குறைவு ஏற்பட்டு அவ்வப்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் கடந்த வாரம் மந்தைவெளியில் அவரது வீட்டில் தடுமாறி கீழே விழுந்தார். இதனால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சில நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கி இருந்து சிகிச்சை பெற்ற டி.எம்.சவுந்தரராஜன் கடந்த 2 நாட்களுக்கு முன்பு குணமடைந்து வீடு திரும்பினார். நேற்றுமுன்தினம் திடீரென்று சுவாச கோளாறு ஏற்பட்டது. உடனடியாக அவர் மீண்டும் மயிலாப்பூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள டி.எம். சவுந்தரராஜனுக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். டி.எம்.சவுந்தரராஜனின் மகன்கள் பால்ராஜ், செல்வகுமார ஆகியோர் உடனிருந்து கவனித்து வருகிறார்கள்.

# சஞ்சய் தத்துக்கு

# 25 ரூபா சம்பளம்



சினிமாவில் பல கோடி சம்பளம் வாங்கும் நடிகர் சஞ்சய் தத்துக்கு, எரவாடா சிறையில் சமையல்காரர் வேலை தயாராக உள்ளது. மும்பை தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் சிக்கிய பிரபல நடிகர் சஞ்சய் தத்துக்கு 5 ஆண்டு சிறை தண்டனை விதித்துள்ளது. இந்த தீர்ப்பை மறுஆய்வு செய்யும்படி அவர் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் வெள்ளிக்கிழமை தள்ளுபடி செய்தது. இதனால், தண்டனையை அனுபவிப்பதற்காக நீதிமன்றத்தில் சஞ்சய் தத் சரணடைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மகாராஷ்டிராவில் உள்ள எரவாடா சிறையில் அவர் அடைக்கப்படவுள்ளார். இதற்கான நடவடிக்கைகளை சிறை அதிகாரிகள் எடுத்து வருகின்றனர்.

இந்த சிறையில் பல்வேறு குண்டு வெடிப்பு குற்றவாளிகள் அடைக்கப்பட்டிருப்பதால் சஞ்சய் தத் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளது. திரையுலகில் முன்னணி கதாநாயகனாக உள்ள சஞ்சய் தத், ஒவ்வொரு படத்துக்கும் பல கோடி சம்பளம் பெறுகிறார். ஒருநாளைக்கு பல இலட்சம் சம்பளமாக வாங்குகிறார். ஆனால், சிறையில் அடைக்கப்பட்ட பிறகு நாற்காலி செய்தல், தையல் அல்லது சமையல் செய்தல் ஆகிய வேலைகளில் ஏதேனும் ஒன்றை அவர் தேர்வு செய்து செய்ய வேண்டும். இதில் அவருடைய தகுதிக்கு ஏற்றபடி நாள் ஒன்றுக்கு ரூ40 அல்லது ரூ35 அல்லது ரூ25 கூலி கிடைக்கும்.

# இந்தியா தாக்குதல் நடத்தாதது ஏன்?

# அமெரிக்க பாதுகாப்பு ஆய்வாளர் விளக்கம்



அணு ஆயுதங்கள் இருந்ததால் பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்த வில்லை என அமெரிக்க பாதுகாப்புத்துறை ஆய்வாளர் ஸ்டீபன் பிளாங்க் தெரிவித்துள்ளார். அமெரிக்க தேசிய இராணுவ தொழில் துறை சம்மேளன கூட்டத்தில் பங்கேற்ற அவர் கூறியதாவது இந்தியா மீதான பல்வேறு பயங்கரவாத தாக்குல்களுக்கு பாகிஸ்தான் பின்னணியாக இருந்தாலும், அந்நாட்டிடம் அணு ஆயுதங்கள் இருந்ததால் இந்தியா பதில் தாக்குதல் நடத்தவில்லை. இரு நாடுகளிடமும் அணு ஆயுதங்கள் உள்ளதால் ஒருவர் மீது ஒருவர் தாக்குதல் நடத்தவில்லை. இதைத் தெரிந்து கொண்டு தான் இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாத செயல்களை தடங்கலின்றி பாகிஸ்தான் மேற்கொண்டு வருகிறது. பாகிஸ்தானிடம் அணு ஆயுதங்கள் இல்லையென்றால் இந்தியா கண்டிப்பாக தாக்குதல் நடத்தி இருக்கும்.

இதே போல் பனிப்போர் காலத்திலும் அணு ஆயுதங்கள் போரை தடுக்கக்கூடிய காரணிகளாக செயல்பட்டன. அமெரிக்கா - சீனா, சீனா -ரஷ்யா இடையே போர் மூள்வது தடுக்கப்பட்டது. பனிப்போர் காலத்தில் முழு ஐரோப்பாவையும் அழித்து விடுவோம் என ரஷ்யா கூறி வந்தது. அதே போல் அமெரிக்காவும் ஒட்டுமொத்த சோவியத் யூனியனையும் அழித்து விடுவோம என கூறியது. அணு ஆயுதங்கள் உள்ளது ஒரு வகையில் உலகை போர் அபாயத்தில் இருந்து காப்பதாக உள்ளது. அதே சமயம் இனி மேல் கூடுதலாக அணு ஆயுதங்களை தயாரிப்பதை தடுக்க வேண்டும் என்றார் பிளாங்க்.

## கடல் நீர் செம்மண் நிறமானது;

## படகு போக்குவரத்து இடை நிறுத்தம்

கன்னியாகுமரியில் முக்கடலும் சங்கமிக்கும் கடலின் நடுவே உள்ள பாறையில் விவேகானந்தர் மண்டபம் உள்ளது.தற்போது கோடை விடுமுறை என்பதால் கன்னியாகுமரியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர்.

இவர்கள் நேற்று காலை 8 மணியளவில் படகு மூலம் விவேகானந்தர் மண்டபத்திற்கு சென்று சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தனர். .8.30 மணியளவில் கன்னியாகுமரியில் அலைகள் அதிக சீற்றத்துடன் எழுந்தன.மேலும் கடல் நீர்மட்டமும் ஏற்றத்தாழ்வுடன் இருந்தது. கடல் நீரின் நிறம் செம்மண் நிறமாக மாறியது. இந்த திடீர் மாற்றத்தால் விவேகானந்தர் பாறைக்கு காலை 8.45 மணியளவில் படகுப் போக்குவரத்து இரத்துச் செய்யப்பட்டது. இதை தொடர்ந்து விவேகானந்தர் பாறையில் இருந்த பயணிகள் அவசர அவசரமாக படகு மூலம் கரைக்கு அழைத்து வரப்பட்டனர்.

படகுப் போக்குவரத்து இரத்துச் செய்யப்பட்டதால் படகில் செல்ல காத்திருந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

. காலை 10 மணியள வில் கடல் நீர்மட்டம் இயல்பு நிலைக்கு திரும்பியதை தொடர்ந்து மீண்டும் விவேகானந்தர் பாறைக்கு படகுப் போக்குவரத்து நடைபெற்றது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்து

## பருத்தித்துறை மெதடிஸ், அராலி சரஸ்வதி, யூனியன் கல்லூரி சம்பியன்



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி



அராலி சரஸ்வதி வித்தியாலயம்



தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள், அராலி சரஸ்வதி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான வலைப் பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிகளும், மூன்றாமிடத்திற்கான போட்டிகளும் கடந்த 8,9ஆம் திகதிகளில் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15,17,19 ஆகிய வயதுப் பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

இதில் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே அசத்திய பருத்தித்து மெதடிஸ்தா பெண்கள் கல்லூரி அணி 13-08 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அணியும், பொன்னாலை வரதராஜப் பொருமாள் வித்தியாலய அணியும் மோதின. இதில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலய அணி 10-06 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

தொடர்ந்து 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் அராலி சரஸ்வதி வித்தியாலய அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதின. இதில் அராலி சரஸ்வதி வித்தியாலய வீராங்கனைகளின் வேகமான ஆட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி தடுமாறியது. சிறப்பான முறையில் செயற்பட்ட அராலி சரஸ்வதி வித்தியாலய அணி 23-11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியும், யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 21-12 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், சண்டிலிப்பாய் இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதின. இறுதியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 25-21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணி யும், யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணி 32-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப்பிடித்துக் கொண்டது. (93)

# யாழ். இந்து, கன்னியர் மடம்

## கூடைப்பந்தில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் திருக்குடும்ப கன்னியர் மடம் மற்றும் யாழ். இந்துக் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப் பற்றிக்கொண்டது.

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணி களுக்கிடையிலான மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்று வந்தது.

மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்றன.

முன்னதாக நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினை எதிர்த்து புனித திருக்குடும்ப கன்னியர்மட அணி மோதியது.

போட்டியின் ஆரம்பம் முதல் இரு அணிகளும் சமபலத்துடன் மோதியதில் வெற்றி அணியினை இலகுவில் தீர்மானிக்க முடிய வில்லை. இருந்து இறுதி நேரத்தில் சிறப்பாக விளையாடிய திருக்குடும்ப அணி வீராங்கனைகள் தொடர்ந்து புள்ளிகள் போட்டு முன்னிலை பெற்றனர்.

இறுதியில் திருக்குடும்ப கன்னியர்மட அணி 35:32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. யாழ்ப்பாணம் இந்து அணி போட்டி ஆரம்பமான நிமிடத்தில் இருந்து தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்தி வந்தது.

யாழ்ப்பாணம் இந்து அணி 86:56 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினை வீழ்த்திச் சம்பியனாகியது.



39ஆவது தேசிய விளையாட்டு விழாவில் பங்கேற்கத் தெரிவாகியுள்ள வடமாகாண கால்பந்தாட்ட அணியை உற்சாகப்படுத்தும் வகையில் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த சிறந்த வீரர்கள் வடமாகாண அணியில் இடம்பெற்றிருக்கின்றார்கள். இவர்களின் தேவைகளை இனங்காண்பதற்காகவே இக்கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வடமாகாண ஆளுநர் ஜீ. ஏ. சந்திரசிறி தேசிய விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளவுள்ளவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். இந்த சந்திப்பில் வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க, யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஆர். மோகனதாஸ், மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட பயிற்சியாளர் எம். எஸ். எம். ஜஸ்மின் மற்றும் விளையாட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். 39ஆவது தேசிய விளையாட்டு விழா எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "பெடியள் விடாயினம்" என்றவர்கள் இன்று பெடியளை (கை)விட்டு விட்டார்களா?

"பெடியள் விடாயினம்" - 1980கள் தொடக்கம் 2009 மே "முள்ளிவாய்க்கால் முடிவு" ஏற்படும் வரை வடக்கில் அதுவும் குறிப்பாக யாழ். குடாநாட்டில் மூத்த பரம்பரையை சேர்ந்த அதிகமானவர்களால் முணுமுணுக்கப்பட்ட ஒன்றாக இது இருந்து வந்தது. இது தவிர "இருந்து பாருமன் பெடியளின் அடியை", "உவங்கள் (இராணுவம்) நல்லா வாங்கிக் கட்டப் போகினம்", போன்றனவும் இம்மக்களினால் அதிகம் பயன்படுத்தப்பட்ட சொற்பிரயோகங்கள் ஆகும்.

இதுபோன்ற சொற்களும் வசனங்களும் இன்னும் அதிகம் உள்ள போதும் விரிவஞ்சி அவற்றை தவிர்க்க விரும்புகின்றேன்.

"பெடியள் விடாயினம்" என்ற சொல்லானது பல்வேறு அர்த்தங்களில் பயன்படுத்தப் பட்டது. பொதுவாக இலங்கை இராணுவத்துடன் மோதல்கள் இடம்பெறும்போது சிலவேளை களில் தற்காலிக இராணுவ பின்னடைவுகளை விடுதலைப் புலிகள் சந்திக்கின்றபோது தம்மைத் தாமே ஆறுதல் படுத்திக் கொள்ளவும், புலிகள் ஒருபோதும் தமது இறுதி இலக்கான தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என் பதை மறைமுகமாக சொல்லவும் இந்த சொற்றொடர் அதிக மாக வழக்கிலிருந் தது. மேலும் புலிகள் போராட்டத்தை ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டார் கள் அவர்களை தோற்கடிக்க முடியாது என்ற அர்த்தத்திலும் இந்த வசனம் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது.



எனினும் யாருமே எதிர்பார்த்திராத விதத்தில் "முள்ளிவாய்க்கால் முடிவுகள்" சோகத்தில் முற்றுப்பெற்ற போது, நிலைமை தலைகீழாக மாற்றமுறத் தொடங்கியது. யுத்த முடிவில் பல ஆயிரக் கணக்கான போராளிகள் ஒன்றில் கைது செய்யப்பட்டார் கள் அல்லது இராணுவத்திடம் சரணடைந்தார்கள். இந்த நிகழ்வோடு "பெடியள் விடா யினம்" என்ற சொல்லும் பயன்பாட்டினின்றும் வழக்கொழியத் தொடங்கியது. மாபெரும் அதிர்ச்சியை "தமிழ் ஈழ" ஆதரவாளர்களுக்கு ஏற்படுத்திய "முள்ளிவாய்க் கால் முடிவுகள்" "பெடியள்" தொடர்பான அவர்களின் அபிப்பிராயத்தை மட்டுமின்றி, அவர்களை நோக்கிய செயற் பாடுகளையும் மாற்றியமைத்த மையானது மிகவும் வியப்பிற் குரிய துயர்மிகு நிதர்சனமாகும்.

உலக நாடுகளில் பொது வாக இவ்வாறான உள்நாட்டு மோதல்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் இயல்பாக எழுகின்ற பிரதான ஒரு பிரச்சினைதான் போராட் டத்தில் ஈடுபட்ட முன்னைநாள் போராளிகளை மீண்டும் அவர்களின் வாழ்விட சமூகங் களுடன் இணைத்து ஓர் இயல்பு நிலை வாழ்க்கை முறையினை மீளக் கட்டியெ ழுப்புவது ஆகும். அதாவது அவர்களை சமூகத்தில் மீளொருங்கிணைத்துக் கொள்வதாகும். ஆயுதம் ஏந்தி போராடிய இவர்களை எப்போதும் இவர்கள் சார்ந்த மற்றும் சாராத சமூகங்கள் உடனடியாகவே தம்முள் உள்வாங்கிக் கொள்வதில்லை. எவ்வளவுதான் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு இவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் இந்த போராளிகள் தொடர்பான அச்சம் அத்துடன், இவர்கள் கடந்த காலங்களில் கொண்டிருந்த ஆயுத அரசியல் மற்றும் இராணுவ வகிபங்குகள் என்பன சமூகத்தில் பலத்த சந்தேகத்தையும் பயத்தையும் கொடுக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

இவ்வாறு அரசினால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள பல ஆயிரக்கணக்கான முன்னைநாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கும் இந்த நிலையே ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் சமூகத்தின் விடிவெள்ளிகளாக பார்க்கப்பட்டும் போற்றப்பட்டும் இருந்த இந்த போராளிகள் இன்று நம்பிக்கை தளம்பிய ஒரு கையறுநிலையில் அநாதரவாக வீதிகளிலே விடப்பட்டுள்ளனர். "விடுதலைப் போராளிகள்", "வீரவேங்கைகள்" மற்றும் "இனத்தின் விடுதலை வீரர்கள்" என்றெல்லாம் போற்றிப்புகழப்பட்ட இவர்களை இன்று ஏறெடுத்துப் பார்க்கவும் யாருமில்லாத நிலை தோன்றியுள்ளது.

குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அயலவர்கள் என்று எல்லோராலும் தனிமைப்படுத்தப்பட்ட நிலை யில் இன்று இவர்களில் பலருடைய காலம் கழிந்து செல்கிறது. ஒரு காலத்தில் ஊர்ச் சந்திகளிலே ஏ.கே 47 ரக ஆயுதங்களை தமது தோள்களிலே மிடுக்காக சுமந்து கொண்டு உலாவரும் இவர்களுடன் நின்று பேசுவ தையே ஒரு பாக்கியமாகவும் சமூக கௌரவமாகவும் கருதிய பலர், இன்று இவர்களைக் கண்டாலேயே சொல்லாமல் கொள்ளாமல் நழுவிச் செல்லும் நிலையே காணப்படுகிறது.

அண்மையில் ஓமந்தையை அண்டிய பிரதேசமொன்றில் முன்னைநாள் போராளிக் குடும்பமொன்றுடன் நட்புடன் உரையாட சந்தர்ப்பம் கிடைத்த போது "மீண்டுமொருமுறை யுத்தமொன்று வந்தால் நீங்கள் இருவரும் என்ன செய்வீர்கள்" என்று இயல்பாகக் கேட்டேன். எதுவித தயக்கமுமின்றி இருவருமே ஒரே நேரத்தில் "நாம் சூசைட் (தற்கொலை) செய்து கொள்வோம்" என கூறியபோது நான் ஒரு கணம் அதிர்ந்தே விட்டேன். அவர்கள் மீண்டுமொருமுறை போராடத் தயாராக இல்லை. (தாம் பிறந்து வளர்ந்த சமூகத்தின் நடவடிக்கைகளினால் அந்தளவு தூரம் அவர்கள் மனம் புண்பட்டிருக்க வேண்டும்) அந்த இருவருமே ஏறத்தாழ 6 வருடங்களுக்கு மேலாக ஆயுத போராட்டத்தில் பங்கெடுத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட போராளிகளில் சிலர் தமக்கேற்பட்ட சொல்லொணா மன அழுத்தங்கள் காரணமாக தற்கொலை செய்துகொண்டதாக சில ஊடக செய்திகளில் வாசித்த ஞாபகம் எனக்கு வருகிறது. இவை வெறுமனே கட்டுக்கதைகளாக பார்க்கப்பட முடியாதவை. ஒரு காலத்தில் தாம் மகத்தானது என நினைத்த ஒரு இலக்கிற்காக தமது இன்னுயிரைக் கூட தியாகம் செய்ய தயாராக இருந்த இவர்கள் இன்று எல்லை கடந்த விரக்தியினால் தற்கொலை செய்யுமளவிற்கு சென்றுள்ளார்கள் என்றால் அது மிகவும் ஆபத்தானது மட்டுமல்ல அதற்கான பொறுப்பை அவர்கள் சார்ந்த முழு சமூகமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். வழமையாக கூறுவதுபோல அவர்கள் உருவாக காரணமாக இருந்த "பேரினவாத அரசே" அதற்கான பொறுப்பையும் சொல்லவேண்டும் எனக் கூறி விட்டு யாரும் தப்பிக்க முயல்வதானது தமது சமூக கடமையில் இருந்து தப்பிக்க முனைவதாகவே அமையும்.

- கலாநிதி எம்.எஸ்.அனீஸ் கட்டுரையிலிருந்து.

# கவலைப்படாத இந்தியர்களும் தைரியசாலி சீனர்களும்



சீனாகாரர்களுக்கு ரிஸ்க் எடுப்பது ரஸ்க் சாப்பிடுவது போல் விருப்பமானது என்கிறது வோல் ஸ்ட்ரீட் ஜேர்ணல் எடுத்த கருத்துக்கணிப்பின் முடிவு. வாழ்க்கைத்தரத்தை ஐம்பது சதவிகிதமாக உயர்த்த சரி பாதி வாய்ப்பு கிடைத்தால் எவ்வளவு தூரம் இழப்பிற்கு நீங்கள் தயார் என்பது கேள்வி. சீனர்களில் மிகப் பெரும்பாலோர் தயார். இந்தியர்களும் நிறைய சோதனைகளுக்குத் தயாராகவே இருப்பதாக பதில் அளித்திருக்கிறார்கள். வருமானத்துக்குப் பதில் நிதியிழப்பு ஏற்பட்டால் நடந்ததை நினைத்து எவ்வளவு தூரம் நினைந்து நினைந்து வருந்துவீர்கள் என்பது இன்னொரு கேள்வி. சீனர்கள் அதுபற்றி அலட்டிக்கொள்ளவில்லை. இந்தியர்கள் சராசரியுடன் ஒத்துப் போகிறார்கள்.

# மாத்தி வாசி

பொருள்கோள் கேள்விப்பட்டிருக் கிறீர்களா? அதாவது ஒரு பாடலை எப்படியெல்லாம் பொருள் கொள்ள வேண்டும் என்று சொல்லும் இலக்கணம் அது.

சொற்கள் உள்ளது உள்ளபடியே வரிசையாகப் படித்து அப்படியே பொருள் கொண்டால் அது ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

அதே போல விற்பூட்டு பொருள் கோள் என்று உள்ளது. பூட்டுவிற் பொருள்கோள் என்றும் இதற்குப் பெயருண்டு.

அதாவது செய்யுளின் கடைசிச் சொல்லை அங்கிருந்து எடுத்து செய்யுளின் முதலில் வைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.

என்னுடைய நண்பன் ஒருவன் பேசுவதெல்லாம் கூட இந்தப் பூட்டுவிற் பொருள்கோள் வகையில்தான் வரும். சற்றே நகைச்சுவையும் கிண்டலும் கலந்துதான் எப்போதும் பேசுவான் அவன். ஒரு எடுத்துக்காட்டு சொல்கிறேன் பாருங்கள்.

"அவனுக்கெல்லாம் இருத்தி வைச்சு வெட்டோணும்" தலைமுடியை. காடு மாதிரி வளர்ந்திருக்கு...

இதில் தலைமுடி என்பதை வரியின் முன்னால் சொன் னால் அதுவொரு சாதாரண கருத்து போல ஆகிவிடும். ஆனால் அதை வேண்டு மென்றே பின்னால் சொன்ன தால் எதையோ ஆபாசமாகச் சொல்ல வருகிறான் என்று நினைத்து கடைசியில் சாதாரணமாக முடியும்.

இது போல முயற்சிகள் திரைப்படங்களிலும் நடந்தன. முதன்முதலில் கண்ணதாசன் இந்த முறையை கந்தன் கருணை திரைப்படத்தில் மிகச்சிறப்பாகச் செய்தார். அடுத்து கே.டி.சந்தானம் அகத்தியர் திரைப்படத்தில் பயன்படுத்தினார்.

கந்தன் கருணை படத்தில் அரியது பெரியது கொடியது இனியது என்று ஔவையாரின் பாடல்களை முருகன் பாடச் சொல்லிக் கேட்பது போல் ஒரு காட்சி. இவையெல்லாம் ஆனதும் முருகன் "ஔவையே புதியது என்ன?"



- ஜீரா -

என்று முருகன் கேட்டதும் கவியர-சரின் வரிகளைக் கே.பி.சுந்தராம்பாள் பாடுவார்.

என்றும் புதியது
பாடல் என்றும் புதியது
பொருள் நிறைந்த பாட[ல்]
என்றும் புதியது
உனைப்பாடும் பொருள் நிறைந்த
பாடல் என்றும் புதியது
முருகா, உனைப்பாடும் பொருள்
நிறைந்த பாடல் என்றும் புதியது

இப்படி அடுக்கி அடுக்கி எழுதியிருப்பார் கண்ணதாசன். இதற்குப் பிறகுதான் பாடலே தொடங்கும். இப்படி வேண்டுமென்று ஏ.பி.நாகராஜன் கேட்டு வாங்கினாரா என்று தெரியவில்லை. ஆனால் அகத்தியர் படத்தில் லேசாக இதே முயற்சியை கே.டி.சந்தானம் செய்திருப் பதிலிருந்து ஏ.பி.நாகராஜனுக்கு இந்த முயற்சி பிடித்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

"இசையாய் தமிழாய்
இருப்பவனே"
இன்னிசையாய்
செந்தமிழாய்
இருப்பவனே

இந்தப் பாடலை குன்னக்குடி வைத்தியநாதன் இசையில் சீர்காழி கோவிந்தராஜனும் டி.ஆர்.மகாலிங்கமும் மிக அருமையாகப் பாடியிருப்பார்கள்.

பொதுவாக ஆற்றுநீர்ப் பொருள்கோளாக ஓடிக் கொண்டிருக்கும் இன்றைய பாடல்களுக்கு நடுவில் இப்படியான விளையாட்டுகள் நிறைந்த இந்தப் பாடல்களையும் கேட்பது சுகமே.




# ஹனிமூன்

**தி**ருமணமான ஜோடிகளுக்கு மிகப்பெரும் இன்ப நிகழ்வாக அமைவது ஹனிமூன் என்கிற தேன்நிலவு தான். தம்பதிகள் உல்லாசமாக சில மாதங்களை கழிப்பதே ஹனிமூன். ஆரம்ப காலங்களில் ஹனிமூன் கிடையாது. ஹனிமந்த் தான் இருந்துள்ளது. அதுதான் பின்னாளில் ஹனிமூனாக மாறியதாக கூறுகின்றனர். டியூட்டன் என்ற இன மக்கள் திருமணமான தம்பதிகளுக்கு தேனை முப்பது நாட்கள் கொடுப்பார்களாம். இதைத்தான் ஹனிமந்த் என்று கூறியுள்ளனர். எகிப்து, பாரசீகம், சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளில் தேனுக்கும், திருமணத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது. புதுமண தம்பதிகள் ஒரே கிண்ணத்தில் இருந்து தேன் பருகும் வழக்கம் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் உண்டு. மணமகள் வீட்டு கதவில் தேனை தெளிப்பது கிரேக்க விவசாயிகளின் வழக்கம். ருமேனிய மக்கள் புதுமண பெண்ணின் முகத்திலும், உடலிலும் தேனை தடவிக்கொண்டு முதலிரவை கொண்டாடுவார்கள்.

புகுந்தவீட்டில் அடியெடுத்து வைக்கும் பெண்ணுக்கு ஒரு கோப்பை தேனை பருக கொடுப்பது துருக்கியர் வழக்கம். போலந்து நாட்டில் மணப்பெண்ணின் உதட்டில் தேன் தடவி, அதை மணமகனை சுவைக்க வைப்பார்கள். பலகாரங்களை தேனில் தொட்டு மணமக்கள் சாப்பிடுவது பால்கன் நாடுகளில் உள்ள மரபு. ஒரு கோப்பையில் தேனை வைத்துக்கொண்டு மணமகனும் மணமகளும் மாறிமாறி பருகுவது சீனர்கள் வழக்கம். இப்படி புதுப்பெண், மாப்பிள்ளைக்கு பல தரப்பட்ட பழக்கங்களை தேனைக்கொண்டே உருவாக்கியுள்ளார்கள். எல்லா நாடுகளிலுமே திருமணமான தம்பதிகளுக்கு தேனை கொடுப்பது ஒரு வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. அதனால்தான், புதுமண தம்பதிகள் செல்லும் முதல் சுற்றுலாவிற்கு ஹனிமூன் என்று தேனின் பெயரையே வைத்து விட்டார்கள்.

# அப்படியென்றால் என்ன?



- அபிக்கல்ச்சர் (Apiculture) என்றால் வணிக முறையில் தேனீயை வளர்த்து தேனை சேகரிக்கும் முறையாகும்.
- ஓனித்தோலஜி (Ornithology) என்பது பறவைகளைப் பற்றி ஆராயும் முறையாகும்.
- ஓரோலஜி (Orology) என்றால் மலைகளைப் பற்றி ஆராயும் துறைக்கான அறிவியல் பெயராகும்.
- ஹோர்ட்டிகல்ச்சர் (Horticulture) என்பது தோட்டக்கலை முறைக்குரிய அறிவியல் பெயராகும்.
- ஓர்த்தோகிராபி (Orthography) என்பது சரியான எழுத்து இலக்கண முறையைக் குறிப்பதாகும்.
- ரொக்ஸிகோலஜி (Toxicology) என்றால் நஞ்சும் அதன் விளைவுகளைப் பற்றிப் படிப்பதாகும்.
- பெட்ரோலஜி (Petrology) என்பது பாறைகள் அவற்றில் தாதுப் பொருள்களின் கூட்டமைப்பு, படிக அமைப்பு, தோற்றம் பற்றிய ஆய்வுக் கல்வியாகும்.
- கிராபோலஜி (Graphology) என்பது கையெழுத்தையும், அதனை எழுதுபவரின் குணநலன்களையும் பற்றி ஆய்ந்து அறிவதாகும்.
- என்ட்ரமோலஜி (Entomology) என்பது பூச்சிகளைப் பற்றி ஆராயும் துறைக்கான அறிவியல் பெயர்.

# பயன் யாருக்குக் கிடைக்கும்?

**து**றவி ஒருவர் ஆற்றங்கரையில் இருந்த கோயில் ஒன்றின் முன்பு தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவரைத் தேடி வருபவர்களுக்கு அருளுரைகள் சொல்வது அவரது வழக்கம்.

ஒரு சமயம் மக்கள் அவரைச் சூழ்ந்திருந்த வேளையில், "முள்ளை முள்ளால்தான் எடுக்க முடியும். அதுபோல் ஆழ்ந்த பக்தியால்தான் இறைவனை அடைய முடியும்" என்றார்.

இதைக் கேட்ட ஒரு விவசாயி, துறவியின் அறிவுரையைப் பின்பற்றினால் என்ன? என்று சிந்தித்தார்.

வயலுக்குச் சென்ற அவர், சேற்றில் இறங்கி வேலை செய்தார். பின்னர் துறவி சொன்ன, முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்பது போல் சேற்றை சேற்றால் கழுவ வேண்டும் என்று முடிவு செய்து சேற்றால் சேற்றைச் சுத்தம் செய்ய முயன்று கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த வழிப்போக்கர் ஒருவர், "என்ன அறிவீனம் இது? சேற்றைத் தண்ணீரில் கழுவாமல் சேற்றாலேயே கழுவினால் சேறு எப்படி சுத்தமாகும்?" என்றார்.

உடனே அந்த விவசாயி, துறவி சொன்ன கருத்தை வழிப்போக்கரிடம் சொன்னார்.

துறவி சொன்ன சரியான கருத்து பிழையாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ள விபரீதத்தை வழிப்போக்கர் உணர்ந்தார். அவர் ஆற்றங்கரையிலிருக்கும் துறவியைப் போய்ச் சந்தித்து நடந்ததை சொன்னார்.

துறவி வழிப்போக்கரிடம், "குளத்தில் பெய்த மழை குடிநீராகும். கடலில் பெய்த மழை உப்பு நீராக மாறுவதைப் போல் நல்லவர்கள் சொல்லும் வார்த்தைகள் அறிவுடையவர்களைச் சென்றடைந்தால் மட்டுமே பயன் தரும்" என்றார்.



# ஆசிரியர்கள் அம்மாவாக வேண்டும்

**ப**டிப்பு சுமையாகிவிட்ட இக்காலத்தில், அதைச் சுவையாக்குவது எப்படி? என்று யாரும் யோசிப்பதாகத் தெரியவில்லை. பிறந்த குழந்தைக்கு 3 வயது எப்போது ஆகும் என்று காத்திருக்கும் பெற்றோர், எங்கேயாவது பாடசாலையில் தள்ளிவிட்டு விட்டு அவசர அவசரமாக வேலைக்கு ஓடும் காலம் இது. எனவே குழந்தைகளின் மன வளர்ச்சி, அறிவு வளர்ச்சி அத்தனைக்கும் பொறுப்பு, பாடம் சொல்லித் தரும் ஆசிரியர்கள்தாம்.

ஆசிரியர் ஆணாகவோ, பெண்ணாகவோ இருக்கலாம். ஆனால் மாணவர்களிடம் பழகும்போது ஒரு தாயைப் போல நடந்து கொள்ள வேண்டும். அவர்களின் உள்ளுக்குள் உள்ள தாய்மை வெளி வர வேண்டும்.

இப்போது ஒரு வகுப்பில் 40 - 50 மாணவர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு வேலைச் சுமை கூடிவிடுகிறது. மாணவர்களை அதிக மதிப்பெண்கள் எடுக்க வைக்க வேண்டிய கட்டாயம். ஆசிரியர்கள் இயந்திரத்தனமாக செயற்பட நேரிடுகிறது. ஒவ்வொரு மாணவனையும் தனித்தனியாகக் கவனிக்க நேரமில்லை. இருந்தாலும் இந்தச் சூழ்நிலையிலும் கூட மாணவனை உருவாக்க வேண்டிய கடமை ஆசிரியருக்கு இருக்கவே செய்கிறது. பிற வேலைகளைப் போல ஆசிரியர் வேலையை நினைக்க முடியாது. ஏனென்றால் ஆசிரியர்கள் வேலை செய்வது உயிருள்ள குழந்தைகளிடம்.

முதலில் கூட்டுக் குடும்பம் இருந்தது. தாத்தா, பாட்டிகளிடம் குழந்தைகள் கதைகள் கேட்டார்கள். தங்களுடைய மனதில் தோன்றுபவற்றைப் பகிர்ந்து கொண்டார்கள்.

ஆனால் இப்போது வீட்டில் தாத்தா, பாட்டிகள் பெரும்பாலும் இல்லை. அம்மா, அப்பா இருவரும் வேலைக்குப் போகும் வீடுகளில், குழந்தைகளுடன் அவர்களால் நன்கு பழக முடியவில்லை.



- ஸ்ரீப்ரியா -

குழந்தைகளின் மனதில் உள்ளதைத் தெரிந்து கொள்ள யாரும் விரும்புவதுமில்லை. அதற்கு நேரமும் இல்லை. குழந்தைகளிடம் உள்ள குழந்தைமை இப்போது தொலைந்து போய்விட்டது. எனவே பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் தாம் குழந்தைகளை உருவாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கிறது. அதாவது ஆசிரியர்கள் அம்மாவாக மாற வேண்டியிருக்கிறது.

குழந்தைகளிடம் எதையும் கண்டிப்பாகச் சொன்னால் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எனவே ஆசிரியர்கள் குழந்தைகளின் மனது தெரிந்து பழக வேண்டும். நான் என் வகுப்பில் படிக்கும் மாணவர்களிடம் அவர்கள் இருக்கும் இடத்தையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வேன். வகுப்பறையில் குப்பைகள் இல்லாமல் இருக்க வேண்டும் என்பேன். மாணவர்கள் குப்பை போட்டால், ஏன் குப்பை போட்டீர்கள்? என்று அவர்களைத் திட்டமாட்டேன். நானே வகுப்பறையைச் சுத்தம் செய்ய ஆரம்பித்துவிடுவேன். அதைப் பார்க்கும் மாணவர்கள் அடுத்தமுறை நான் சொல்லாமலேயே அவர்கள் இருக்கும் இடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வார்கள்.

மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் எடுக்க வேண்டும் என்று எல்லாரும் இப்போது வற்புறுத்துகிறோம். எதிர்பார்க்கிறோம். ஆசிரியர் மாணவர்களைக் கசக்கிப் பிழிந்து நல்ல மதிப்பெண் எடுக்க வைக்க முடியாது. ஆசிரியரைப் பிடித்தால்தான் மாணவர்களுக்கு பாடம் பிடிக்கும். அப்போதுதான் நல்ல மதிப்பெண் எடுப்பார்கள்.

பெரியவர்களுக்கு இருக்கும் ஆயிரம் டென்ஷன்களைப் போலவே குழந்தைகளுக்கும் இருக்கிறது. ஆனால் குழந்தைகளின் மன உணர்வுகளைப் பெரியவர்களாகிய நாம், புறக்கணித்துவிடுகிறோம். ஓர் ஆசிரியர் தனது மாணவர்களின் மன உணர்வுகளைத் தெரிந்து கொண்டு, அன்பாகப் பேசினால் மாணவர்களை நன்றாகப் படிக்கும்படி செய்ய முடியும். அவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்க முடியும்.

என்னிடம் பயிலும் மாணவர்களில் பலர் ஏழைகள். ஏன் வீட்டுவேலையை முடிக்கவில்லை என்று அவர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக, அதற்கான காரணங்களைத் தெரிந்து கொள்வேன். அவர்கள் சொல்லும் பதில்களைக் கேட்டால் சில நேரங்களில் அதிர்ச்சியாக இருக்கும். அப்பா இல்லாத குழந்தைகள். கூலி வேலை செய்யும் அம்மா. உணவுக்குக் கூட வழியில்லாத குழந்தைகள் என அவர்களின் சூழ்நிலைகளைத் தெரிந்து கொண்டால், எப்படி வீட்டுவேலை செய்யாததற்காக அவர்களைத் தண்டிக்க முடியும்?

எனவே நான் என் மாணவர்களிடம் ஓர் அம்மாவைப் போல அன்பாக நடந்து கொள்கிறேன். அவர்களும் என்னிடம் மிக அன்பாக நடந்து கொள்வதுடன், அவர்களுடைய குறைகளையும் திருத்திக் கொள்கிறார்கள். நன்றாகப் படிக்கிறார்கள். நிறைய மதிப்பெண்கள் எடுக்கிறார்கள்.

# சர்வதேச தரத்தை எட்டிப்பிடிக்கும் ஆங்கிலக் கல்விப் போதனை




தமிழ் மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தவும், ஆங்கிலக் கல்வியூடாக அவர்களை நற்பிரஜையாக உருவாக்கவும் இந்த ஆங்கிலக்கல்லூரி 2009 ஆம் ஆண்டு யாழ்.நகரிற்கு அண்மையில் உள்ள சங்கானையில் நிறுவப்பட்டது.

இந்தக் கல்லூரியானது இதுவரை ஏழாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களை ஆங்கிலப் புலமை மிக்கவர்களாகவும், ஆங்கில மேடைப்பேச்சு உடையவர்களாகவும் உருவாக்கி தலை நிமிர்ந்து நிற்கிறது.

இந்தக் கல்லூரி நிறுவனத்தின் குறிக்கோள் இலாப நோக்கமின்றி, சுயநலத்தை எதிர்பார்க்காமல் பொதுநல நோக்கோடு ஆங்கில மொழியைப் போதிக்கவேண்டுமென்பதே. இந்தக்கல்லூரியிலே பல்கலைக்கழகமாணவர்கள் அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், வங்கிகளில் பணி புரிவோர், தனியார் நிறுவனங்களில் பணி புரிவோர், வெளி நாடுகளுக்குச் செல்வோர் என பலதரப்பினர் கற்று வருகின்றனர்.

லயன் ஜெ.றஜீவன் அவர்களைத் தலைவராகவும், டாக்டர் அழகேந்திரம் ஜெயக்குமார் அவர்களை முகாமைத்துவப் பணிப்பாளராகவும், லயன் டாக்டர் சு.ஜெயச்சந்திரமூர்த்தி, ஜே.பி. அவர்களை நிர்வாகப் பணிப்பாளராகவும், திருமதி ந.மயூரிக்கா (பரீட்சைகள் பொறுப்பதிகாரி), கலாவித்தகர் திருமதி பிறின்ஸியா கபிலன் ஆகியோரை இயக்குனர்களாகவும் கொண்டு செயற்பட்டுவருகிறது.

யாவரும் ஆங்கிலம் பேசுவோம் என்ற நோக்கத்துடன் மேன்மை தாங்கிய எமது ஜனாதிபதியின் மகிந்த சிந்தனைக்கமைய மும்மொழித்திட்டக் கொள்கையின்படி ஆங்கில மொழி மட்டுமல்லாது சிங்களமொழிக் கல்வியையும் மாணவர்களுக்குப் புகட்டும் நோக்குடன் தமிழ் மொழியில் புலமை மிக்க சிங்கள ஆசிரியரைக் கொண்டும் சிங்களமொழி புகட்டப்படுகிறது.

இந்தக் கல்லூரியில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேச மாணவர்கள் கற்பதுடன், குடாநாட்டில் பல பகுதிகளிலுமிருந்து அதாவது, யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் போன்ற இடங்களிலிருந்து பல துறைகளைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து கல்வி கற்கின்றனர்.

**வடக்கில் வேர்விடுகிறது E CITY ஆங்கிலக் கல்லூரி**




ஆறுமாதகால தொடர் பயிற்சியின் பின்னர் மூன்று பிரிவுகளாக பரீட்சைகள் நடைபெற்று ஈற்றில் மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படும் பட்டமளிப்பு விழாவானது பல்கலைக்கழகங்களிலே எவ்வாறு நடாத்தப்படுகிறதோ அதேபோல துறைசார் பல்கலைக்கழகப் போராசிரியர்களைக் கொண்டு பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்கள்.

இந்த ஈ–சிற்றி கல்விக் கல்லூரியானது யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி வீரகாளி அம்மன் கோயில் அருகில் (நல்லூர்) இயங்கி வருகிறது. நிர்வாக இயக்குனரின் தொலைபேசி இலக்கம் 077 492 4166 கல்லூரி நிர்வாகம் மாணவ்களுக்கு பல அரிய புத்தாகங்களை (பயிற்சிப் புத்தாகங்கள் உட்பட) இலவசமாக வழங்கிவருகிறது.

கொடிய யுத்தம் முடிந்த சூழ்நிலையில் எம் தமிழினம் நிமிந்து நடைபோட்டு வரும் வேளையில் நாம் அவர்களுக்கு செய்யும் சேவை ஆங்கில மொழியறிவுடன் நற்குணம் கொண்ட ஒழுக்க சீலர்களாக நற்பிரஜைகளாக நாட்டிற்கு உருவாக்கிக் கொடுப்பதே என்ற எமது நிறுவன தலைவர் லயன் ஜெ.றஜீவன் அவர்களின் முக்கிய குறிக்கோளை நாம் எல்லோரும் மனதில் கொள்வோம் என்று அதன் நிர்வாகப் பணிப்பாளர் லயன் டாக்டர் க.ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்தார்.

# நிலையான சேமிப்புக்கு உயர்வட்டிவிதம் மட்டுமல்ல




## மருத்துவக் காப்புறுதியும் கிடைக்கும்

உங்கள் சேமிப்பை நிலையான சேமிப்புக்கணக்கு ஒன்றின் மூலமாக மேற்கொள்ளப்பட்டால் உங்களுக்கு கிடைப்பது உயர்ந்த வட்டி வீதம் மட்டுமல்ல உங்கள் குடும்பத்துக்கான இலவச மருத்துவக் காப்புறுதியும்தான் என்கிறார் பான் ஏசியா வங்கியின் முகாமையாளர்.

◆ சுவசவி நிலையான வைப்பு பான் ஏசியா வங்கியின் புதிய பெறுமானம் சேர்க்கப்பட்ட அறிமுகத்திட்டமாகும். நிலையான வைப்புக்கான வட்டிக்கு மேலதிகமாக வைப்பாளருக்கான வட்டிக்கு மேலிதகமாக வைப்பாளருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவக் காப்புறுதியொன்றையும் வழங்குவது இத்திட்டத்தின் தனித்துவமாகும்.

◆ 65 வயதிற்கு மேற்பட்ட வைப்பாளர்களும் இந்தக் காப்புறுதிக்கு உரித்துடையவர்கள் 65 தொடக்கம் 75 வயது வரையுள்ளவர்களுக்கு அவர்களது வைப்புத் தொகையின் 10 வீதம் மருத்துவக் காப்புறுதியாக வழங்கப்படும்.

◆ சுவசவி மருத்துவக் காப்புறுதி மூலம் வாடிக்கையாளரும், அவரது குடும்பத்தினரும் பயன்பெறலாம். குடும்பம் என்பது கணவன், மனைவி, 21 வயதிற்கு குறவான திருமணம் செய்யாத தொழில் புரியாத பிள்ளைகளையும் உள்ளடக்கியது.

◆ வைப்பாளர் திருமணம் முடிக்காதவராயின் 65 வயதிற்கு குறைவான அவரது பெற்றோர்களையும் இந்தக்க காப்புறுதித் திட்டத்தில் உள்ளடக்கமுடியும்.

◆ சுவசவித்திட்டத்திற்கான குறைந்த பட்ச வைப்பு 100,000 ரூபாவும், வைப்புக்காலம் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்டதாகவும் இருக்கலாம்.

◆ சுவசவித்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் நாடெங்கிலுமுள்ள எமது 73 கிளைகளில் ஏதாவதொன்றுக்கு விஜயம் செய்வதன் மூலமாகவோ 011 4667222 என்ற தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதன் மூலமாகவோ மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

# ஆபத்தான வேளையில் கைகொடுக்கும் “ஹெல்த் நெட்”

யூனியன் அசூரன்ஸ் இந்தியாவில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான ‘ஹெல்த் நெட்’ காப்பீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கையில் மருத்துவத்துறை வேகமாக முன்னேறி வரும் போதும் பலரும் வெளிநாடுகளில் ஆபத்தான நோய்களுக்கான மருத்துவ சிகிச்சையைப் பெற விரும்புகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு யூனியன் அசூரன்ஸ் அண்மையில் ஹெல்த் நெட் எனும் பெயரில் குறைந்த கட்டுப்பணத்தின் மூலம் பெறக்கூடிய மருத்துவக் காப்பீட்டை அறிமுகம் செய்துள்ளது. இது இலங்கையர்கள் இந்தியாவில் மேற்கொள்ளும் மருத்துவ செலவீனங்களைக் காப்பீடு செய்கிறது.

யூனியன் அசூரன்சின் டொக்டர் சுரங்க ரணசிங்ஹ கூறும்போது, ‘இந்தியாவில் சிகிச்சை பெறுவது வசதி படைத்தோருக்கு மட்டும் உரிய வரப்பிரசாதமாக இருந்தது மாறி சராசரி வருமானம் கொண்டோரும் அவ்வசதியைப் பெறும் வாய்ப்பு யூனியன் ‘ஹெல்த் நெட்’ மூலம் கைகூடியுள்ளது. உலகத் தரம்வாய்ந்த மருத்துவ நிபுணர்கள் மற்றும் தொழில் நுட்பம் என்பன நன்கு வளர்ச்சியுற்ற இந்தியாவின் மருத்துவத்துறையை இலங்கையரின் சிறந்த தெரிவாக ஆக்கியுள்ளது. ஆபத்தான நோய்களுக்கான சிகிச்சையும், கவனிப்பும் சிறந்த தரத்தைக் கொண்டுள்ளன’. என்றார்.

யூனியன் அசூரன்சின் பேச்சாளர் கூறும்போது, ‘அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மருத்துவ செலவுகளைக் காப்பீடு செய்யும் காப்புறுதிகள் இலங்கையில் இருந்தாலும் அவை வசதி குறைந்ததாகவே இருக்கின்றன. அமெரிக்கா போன்ற தூர நாடுகளுக்குச் சென்று சிகிச்சை பெறுவது ஆபத்தான நோய்க்கு ஆளாகியிருக்கும் நோயாளிகளுக்கு மிகுந்த அசௌகரியமாகும். இந்திய மருத்துவத் துறை மேலை நாடுகளுக்கு சமமாக உலகப்பிரசித்தி பெற்றவையாக வளர்ந்துள்ளன. எனவே இந்தியாவின் மருத்துவ அதிசயங்கள் இலங்கையருக்கு குறைந்த செலவில் கிடைக்கின்றன’ என்றார்.

3800 இற்கும் மேற்பட்ட இந்திய மருத்துவமனை வலையமைப்பில் பெயர் பெற்ற மருத்துவமனைகளான அப்பலோ கூட்டாண்மை, சங்கரா கண் மருத்துவமனை, மக்ஸ் குழுமம், லீலாவதி மருத்துவமனை, பிரீச் கண்டி, டி.ஹிந்துஜா அண்ட் கங்காராம் மருத்துவமனை போன்றன இணைந்துள்ளன. 5 வயதிலிருந்து 60 வயதுவரையான அனைத்து இலங்கையரும் பயன்பெறும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட ‘ஹெல்த் நெட்’ காப்புறுதியைப்பெற 45 வயதுக்குக் குறைவானோருக்கு மருத்துவ பரிசோதனை தேவைப்படுவதில்லை.

நட்டஈட்டு நிர்வாகம் மற்றும் துணைச் சேவைகள் இந்தியாவின் முதல்தர நலநிர்வாக சேவை நிலையமான வரையறுக்கப்பட்ட ஐசிஐசிஐ லொம்பார்ட் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றன.

# சாரணிய தந்தை பேடன்பவல் சிலை

# புனரமைக்கப்பட்டு திறந்துவைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள சாரணியத்தின் நிறுவுனர் பேடன் பவலின் சிலை புனரமைக்கப்பட்டு வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் 06 மே 2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.பரியோவான் கல்லூரியின் சாரணிய அமைப்பினால் இச்சிலையும் அதன் சுற்றுப்புறங்களும் புனரமைக்கப்பட்டது யாழ்.பரியோவான் கல்லூரி அதிபர் வணக்கத்திற்குரிய என்.ஜே.ஞானப்பொன்ராஜா தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.பரியோவான் கல்லூரியின் சாரணிய அமைப்பின் வேண்டுகோளுக்கமைய ரூபா 1.5 இலட்சம் பெறுமதியான காசோலை யாழ். பரியோவான் கல்லூரி சாரணியத் தலைவரிடம ஆளுநரினால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.பரியோவான் கல்லூரியின் உப அதிபர் மற்றும் சாரண அமைப்பின் பொறுப்பாசிரியர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். (20)

## களைகட்டுகிறது கிளிநொச்சி; வெசாக் தின ஏற்பாடுகள் மும்முரம்

(யாழ்.நிருபர்)

எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ள வெசாக் தினத்தை சிறந்த முறையில் கொண்டாடுவதற்கு படையினர் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் வெசாக் கொண்டாட்டங்கள் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளன. இததையொட்டி கிளிநொச்சியில் மிகப்பிரமாண்டமான வெசாக் பந்தல் மற்றும் அலங்காரங்களைச் செய்வதற்கான ஏற்பாடுகளைப் படையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் பாரிய வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் 24 ஆம் திகதி வரை பொது மக்களின் காட்சிக்காக இது திறந்திருக்கப்படுமென படையினர் தெரிவித்துள்ளனர். (10)

## யோக சுவாமியின் தியான இல்லம் கொழும்பில் அமைக்க ஏற்பாடு

சிவயோகசுவாமி நம்பிக்கை நிதியம் கொழும்பில் யோகசுவாமி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்துவருகிறது. இந்நிலையத்தினூடாக யோகர் சுவாமிகளின் போதனைகளையும், வழிகாட்டல்களையும் பரப்ப முடியும்.

இப்புனித கைங்கரியத்தை நிறைவேற்றுவதற்குப் போதியளவு நிதி தேவைப்படுவதால் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் குருபரனின் சீடர்களும், பக்தர்களும், அபிமானிகளும் இயன்றளவு பொருளுதவி செய்யவேண்டுமென மேற்படி சிவயோகசுவாமி நம்பிக்கை நிதியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பில் ஒரு நிலையம் அமைப்பதற்கு தங்களுடைய ஆதனத்தை நன்கொடையாக தந்துதவவிரும்புபவர்கள் கொழும்பில் உள்ள ஆதனத்தையோ, யாழிலுள்ள ஆதனத்தையோ தந்துதவலாமென நிதியத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (10)

## வலிகாமம் கல்வி வலயத்தில் மானிப்பாய் மகளிர் கல்லூரி முதல்நிலை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றில் வலிகாமம் கல்வி வலயத்தில் மானிப்பாய் மகளிர் கல்லூரி முதல்நிலை பெற்றுள்ளது.


கடந்த வருடம். இடம்பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் வலிகாமம் கல்வி வலயத்தில் அதிகூடிய சித்தி வீதத்தினைப் பெற்ற கல்லூரி என்ற இடத்தினைப் பெற்றுக் கொண்டது.

பரீட்சைக்குத் தோற்றிய 74 மாணவிகளில் 90.5 சதவீதமான மாணவிகள் க.பொ.த. உயர் தரத்தில் கல்வி கற்பதற்குத் தகைமை பெற்று சண்டிலிப்பாய் கோட்டத்திலும், வலிகாமம் கல்வி வலயத்திலும் முதல் நிலையைப் பெற்றுக்கொண்டது.

அத்துடன் அனைத்துப் பாடங்களிலும் ஏ சித்தியினை மாணவியொருவர் பெற்றுள்ளதுடன், ஆங்கில மொழி மூலம் தோற்றிய மாணவிகளில் ஒருவர் 8ஏ,பி சித்தியினையும் பெற்றுள்ளார்.

இரண்டாவது வருடமாகவும் ஆங்கில மொழி மூலப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகள் அனைவரும் 100 வீத சித்தியடைந்துள்ளதுடன் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.

சைவநெறி, கிறிஸ்தவம், தமிழ், ஆங்கிலம், குடியுரிமைக் கல்வி, கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், தகவல் தொழில் நுட்பம், மனைப்பொருளியல், ஆகிய பாடங்களில் 100 வீதமும், ஆங்கிலப் பாடத்தில் 50 வீதமும், கணிதப் பாடத்தில் 85 வீதமும், வரலாற்றுப் பாடத்தில் 92 வீதமும், விஞ்ஞானப்பாடத்தில் 69 வீதமும், வர்த்தகத்தில் 93 வீதமும், புவியியற் பாடத்தில் 94 வீதமும், சித்திரப் பாடத்தில் 80 வீதமும், தமிழ் இலக்கிய நயம் பாடத்தில் 91 வீதமும், சித்தியடைந்துள்ளதாக அதிபர் அறிவித்துள்ளார். (06)



தினமுரசுப் பத்திரிகையும் கிளிநொச்சி எடிசன் கல்லூரியும் இணைந்து நடாத்திய வருடமொரு பரீட்சை, தரம் 10,, 11 மாணவர்களிற்கு கடந்த புதன்கிழமை மு.செம்மலை மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இச்செயற்றிட்டத்தை முன்னெடுத்த கிளிநொச்சி எடிசன் கல்லூரி, தினமுரசு பத்திரிகையின் நிர்வாகத்தினர் மற்றும் எழுத்தாளர் எஸ்.என்.தயானுக்கும் மு.செம்மலை மகா வித்தியாலய சமூகத்தினர் நன்றிகளைத் தெரிவிக்கின்றனர்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

பிரபல வைத்திய நிலையத்திற்கு ஆயுர்வேத வைத்தியர் தேவைப்படுகின்றார். பதிவு பெற்றவராக இருத்தல் விசேட தகைமையாகக் கொள்ளப்படுகிறது. தொடர்புகளுக்கு க.சீவறட்ணம் சிவராசா, சம்பந்தன் லேன், சுதுமலை தெற்கு சுதுமலை.

---

யாழில் இயங்கும் தையல் நிலையத்திற்கு தையல் வேலை தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் தேவைப் படுகின்றனர். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விரும்புவோர் நேரில் வரவும். நேரில் வரவேண்டிய முகவரி: சியானாஸ் தையலகம், 77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம்: 021 222 9575.

---

குழந்தைப்பாவனைகள் மற்றும் உயர்தர உற்பத்திகளின் பிரமான இறக்குமதி விநியோகஸ்தர்களான A& A Trading Ventures நிறுவனத்தினர் மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், அம்பாறை, வவுனியா போன்ற பிரதேசங்களில் இருந்து புதிய முகவர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. தகைமைகளாக வணிகம் மற்றும் சம்பந்தப்பட்ட பொருட்கள் தொடர்பான போதிய அறிவும், வணிகத்துறை சார்ந்த சிறந்த வலையமைப்பு, போதிய நிதி வலிமையும் போட்டி வாதங்களும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி No.6,1/1 Visaka Road, Colombo - 04. தொலைபேசி இலக்கம் 011 50004, 077 3738 963.

---

பிரசித்தி பெற்ற பிறிண்டிங் நிலையத்திற்கு கீழ்க்காணும் பணிநிலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இயந்திர இயக்குனர் (பழக விரும்புவோர்). புத்தகம் கட்டுனர் (அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும்), ஸ்கிறீன் பிறிண்டிங் (பழக விரும்புபவர்கள்). தொடர்புகளுக்கு மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ், 15/2, முருகேசர் லேன், நல்லூர். தொலைபேசி இலக்கம்: 021 222 9285, 077 722 259.

---

நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையின் முன்பகுதியில் கடமையாற்றுவதற்கு ஒரு பொதுசன உத்தியோகத்தருக்கான வெற்றிடம் உள்ளது. இந்தப் பதவிக்கு 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் மட்டும் விண்ணப்பங்களை சுயவிபரக்கோவையுடன் நேரிலோ தபால் மூலமாகவோ அனுப்பவும். அனுப்ப வேண்டிய முகவரி, மனிதவள பணிப்பாளர், நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை, 342, பலாலி வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

---

Apply New Jobs, கொழும்பை அண்மித்த கோடியல், பிஸ்கட், க்ளவுஸ், பிளாஸ்டிக், ஆடைத்தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல், பொதியிடல், பிரிவுகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. 18 தொடக்கம் 50 வயதிற்கு உட்பட்டவர்கள் உடனடியாகத்தேவை. தங்குமிட வசதி, உணவு என்பன குறைந்த விலைகளிலும், நண்பர்களாகவும், குழுக்களாகவும், தம்பதியினராகவும் வருபவர்களுக்கு ஒரே தொழிற்சாலைகளிலும், ஒரே அறை வசதிகளும் செய்து கொடுக்கப்படும். வருகைதரும் நாளன்றே வேலை வாய்ப்பு வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 556 1883.

---

தலைசிறந்த PVC தயாரிப்பு கம்பனியில் வேலை செய்வதற்கு 18 தொடக்கம் 50 வரையான ஆண்கள் தேவைப்படுகின்றனர். 25,000 ரூபா தொடக்கம் 28,000 ரூபா வரையான சம்பளம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 077 628 9655.

---

நெல்லியடி பிரதான வீதியில் அமைந்துள்ள திருநடனமுருகன் மருந்துக்கடைக்கு அனுபவம் உள்ள விற்பனையாளர்கள் தேவை. 18 தொடக்கம் 40 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 021 321 2945.

---

பிரபல உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்திற்கு வேலைக்கு ஆள் தேவை. 25 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு 077 774 6535

# பொதுநலவாய மாநாட்டுக்காக
# உற்சாகத்துடன் தயாராகிறது கொழும்பு

(கொழும்பு)

பொதுநலவாய மாநாடுக்காக மிகுந்த உற்சாகத்துடன் தயாராகி வருகிறது கொழும்பு நகரம். இதற்கான சகல ஏற்பாடுகளையும் பொதுநலவாய மாநாட்டுச் செயலகமும், வெளிவிவகார அமைச்சும் இணைந்து மேற்கொண்டு வருகிறன.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டுக்காக முதற்கட்டமாக சுமார் 6000 தங்கும் அறைகள் முன்கூட்டியே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் நவம்பரில் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க வரும் தலைவர்களுக்கு கொழும்பு மற்றும் கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் தங்குமிட அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதேவேளை மாநாடு கொழும்பில் நடைபெறும் நிலையில் பல துணை நிகழ்வுகள் அம்பாந்தோட்டையிலும், தம்புள்ளவிலும் நடைபெறவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்து பால்மாவுக்கு தடை விதிக்குமா அரசு

(கொழும்பு)

பால்மாவில் கதிர்வீச்சுத்தாக்கம் காணப்படுவதால் நியூசிலாந்து நாட்டின் பால்மா வகைகளைத் தடைசெய்வது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

நியூசிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களைத் தடைசெய்வது தொடர்பில் தற்போது தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அண்மைக் காலத்தில் நியூசிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களில் கதிர்வீச்சுத் தாக்கம் உள்ளதாக வெளியான தகவலை அடுத்தே இந்த ஆராய்வு மேற்கொள்ளப்படுகிறது.

அண்மையில் இலங்கைக்கு வந்த நியூசிலாந்தின் இரண்டு அமைச்சர்கள் தமது பால்மாக்களின் இறக்குமதியைத் தடைசெய்ய வேண்டாம் என்று இலங்கை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் நியூசிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மாக்கள் தொடர்பில் சிங்கப்பூரில் ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பால்மாக்களில் அடங்கியுள்ள கதிரியக்கத் தாக்கங்களினால் நீரிழிவு உட்பட்ட நோய்கள் ஏற்படும் என்று மருத்துவத்துறையினர் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தெற்கில் புதிய மேம்பாலம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா - கொழும்பு அதிவேக பாதையின் பிரவேசத்திற்கு அருகில் புதிய மேம்பாலத்தைத் துரிதமாக நிர்மாணிக்க அரசு தீர்மானித்துள்ளதாக பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார்.

700 மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதி ஆறு பாதைகளைக் கொண்டிருக்கும்.

நவலோக்க சுற்றுவட்டப் பகுதியிலும் ஒருகொடவத்த பகுதியிலும் ஏற்படுகின்ற வீதி நெருக்கடி காரணமாக அரசாங்கம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது. அதிவேகப் பாதையில் 90 வீதப் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

புதிய மேம்பாலம் நிர்மாணிக்கப்படும் வீதிக்கருகில் தற்போது வசிக்கும் 300 சேரிப்புற குடும்பங்களுக்காக புதிய வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

புதிய மேம்பாலத் திட்டத்தின் கீழ் இத்திட்டத்தையும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி தமக்கு உத்தரவிட்டதாகவும் இம் மேம்பாலத் திட்டத்தை மேற்கொள்ளும் நிறுவனத்துக்கே வீடமைப்புத் திட்டமும் ஒப்படைக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# ஷிராணி மீது தொந்தரவுகள் அதிகம்
# சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்



(கொழும்பு)

முன்னாள் பிரமத நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா மீது தேவையற்ற வகையில் தொந்தரவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சட்டத்தரணிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையின் 43ஆவது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் மீது மேற்கொள்ளபபடும் தொந்தரவுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம கோரிக்கை விடுத்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமையன்று சட்டத்தரணிகள் சங்கம் இது தொடர்பில் யோசனை ஒன்றை நிறைவேற்றியுள்ளது. சிராணி பண்டாரநாயக்காவின் மீது தேவையற்ற ரீதியில் தொந்தரவுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என்று சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. அவர் மீது இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளமை தொடர்பிலேயே இந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 17 ஆம் திகதியன்று மாத்தறைக்கு வரும் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை வரவேற்பதில்லை என்று மாத்தறை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

# மாணவர் இடைவிலகலைத் தடுக்க கிளிநொச்சியில் செயற்றிட்டம்

(யாழ்.நிருபர்)

பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு அவர்களைப் பாடசாலைகளில் மீள இணைக்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு இடைவிலகிய மாணவர்களை மீள இணைக்கும் பணியில் கிராமசேவை அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரிப்பயிலுநர்கள் ஆகியோரும் ஈடுபட்டு வருகின்றனர். மீள இணைக்கப்படும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் மற்றும் பல்வேறு பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

இச் செயற்றிட்டத்தில் மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றபோது கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, யாழ்.வணிகர் சங்கத் தலைவர் எஸ்.ஜெயசேகரம் உட்பட மற்றும் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (10)

# வடக்குத் தேர்தலுக்குமுன் கவனிக்க வேண்டிய விடயம்

சனத்தொகைப் பரம்பல் தொடர்பில் கவனம் செலுத்தாது தேர்தல் நடத்தக் கூடாது என ஜாதிக ஹெல உறுமயக் கட்சி தெரிவித்துள்ளது. வடக்கின் சனத்தொகைப் பரம்பலில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த நிலையில் தேர்தல் நடாத்துவது உசிதமானதல்ல எனவும் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பேச்சாளர் நிசாந்த சிறிவர்னசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கிலிருந்து சிங்களவர்களும், முஸ்லிம்களும் வெளியேற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். குறித்த சிங்களவர்களும், முஸ்லிம்களும் மீள் குடியேற்றாது தேர்தல் நடத்துவது ஏற்புடையதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அக்ஷய திருதியை யாழில் கோலாகலம்

(யாழ்.நிருபர்)

ஐஸ்வர்யம் தரும் அக்ஷய திருதியைத் திருநாளாகிய நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக்கடைகளில் மக்கள் நகைகளைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

செல்வத்திற்கு அதிபதியான குபேரன் சங்கநிதி, பதுமநிதி என்கிற ஐஸ்வர்ய நிதிக்கலசங்களைப் பெற்ற அக்ஷய திருதியை நன்நாளில் செய்யப்படும் எந்த ஒரு நல்ல காரியமும் அதிக பலன்களைத்தரும் என்பதும், அள்ள அள்ளக்குறையாத இந்நாளில் வாங்கப்படும் எந்தப் பொருளும் இல்லத்தில் எப்போதும் குறைவின்றி நிறைந்திருக்கும் என்பதும் இந்துக்களின் நம்பிக்கை. இதனாலேயே இந்நாளில் தங்கம் வாங்குவதற்கு பலரும் முண்டியடிப்பதுண்டு.

இந்தியாவிலும், இலங்கையிலும் நேற்றைய தினம் தங்க விற்பனை அமோகமாக நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை வர்த்தக நிலையங்களுக்கு விடுமுறைநாளாக இருந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் எல்லா நகை வியாபாரநிலையங்களும் திறந்திருந்தன. பெரும்பாலான நகைவியாபாரிகள் வாடிக்கையாளரைக் கவரும் வகையில் பல்வேறு பரிசுத்திட்டங்களையும் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# யாழ்ப்பாணத்தில் கம்பன்விழா


(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் கம்பன் கழகம் நடத்தும் கம்பன்விழா இம்மாதம் 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் மூன்று தினங்கள் யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பட்டிமன்றம், கவியரங்கம், வழக்காடு மன்றம் போன்ற நிகழ்வுகளில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் உட்பட ஈழத்தின் பல்வேறு அறிஞர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தமிழகத்திலிருந்தும் சிறிப்புப் பேச்சாளர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கம்பன் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சு, கவிதைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் இவ்விழாவில் வழங்கப்படவுள்ளன. (10)

# பரமர் சங்கமம்



'ஊத்தை போகக்குளிச்சவனுமில்லை; பசிபோகச் சாப்பிட்டவனுமில்லை' எண்டதுபோலதான் அழகுபடுத்துகிறகாரியங்களும்.

எண்டாப்போல குளிக்காமலோ. சாப்பிடாமலோ எந்த ஒரு மனிசனாலும் இருந்துவிட முடியுமா? ஊத்தை போகக் குளிச்சாலும் மறுநிமிடம் எப்புடியோ ஊத்தை பிரளத்தான் செய்கிறது.

பசிக்குச் சாப்பிட்டால் அடுத்தவேளை பசியெடுக்கத்தான் எடுக்கிறது இதனால்தான் அப்புடிச் சொல்லி வைத்தனர் போலும்?

இந்த அழகு படுத்துற காரியம் எல்லாரும் இல்லை. அதிலும் ஆண்களை விடவும் பெண்கள் தான் மும்முரம் கடை தெருவுக்கோ. கல்யாண வீட்டுக்கோ. வேறேதும் காரியங்களுக்கோ. பெண்கள் வெளிக்கிடுவதெண்டால் சில மணிநேரங்கள் விரையமாகத்தான் செய் கிறது.

பெண்கள் அவ்விதம் பூசிப் புனர்வதையும் அந்தக் காலச் சினிமாப் பாடலொண்டில் 'கொண்டையில் தாளம் பூவாம் உள்ளே இருப்பது ஈரும். பேனாம' என நையாண்டி செய்தும் உள்ளனர்.

அண்மைக் காலத்தில் பதவிக்கு வந்த மின்சக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி சமீபத்தில் கலந்து கொண்ட நிகழ்வில் பெண்களுக்கு ஒருவேண்டுகோள் விடுத்திருந்தார்.

தற்காலப் பெண்கள் தங்களை அழகுபடுத்துவது மிகையாக இருப்பதாக! அதனைக் குறைந்துக்கொள்ள வேணுமெண்டும் கேட்டுக் கொண்டார். அதனால் தங்களுக்கு ஆபத்துகளைத் தேடிக் கொள்வதாகவும் அவருடைய கூற்றில் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது.

அவ்வெச்சரிக்கையில் இரண்டு பக்கங்கள் உண்டென்பதைப் பெண்கள் உணர்வார்களா என்ன? தேவதைகளாகத் தம்மை அழகுபடுத்திக் கொள்கின்ற பெண்களுக்கு காமுகர்களிடம் இருந்து வரவிருக்கும் ஆபத்திலிருந்து காத்துக் கொள்வதொன்று.

அடுத்தது அழகு சாதனப்பொருட்களை உற்பத்தி செய்யும் ரசாயனப் பதார்த்தங்களால் உருவாகின்ற ஒவ்வாமையால் உடல் நிலை பாதிப்பதும் இல்லாமல் உயிராபத்துகளும் தோன்றுவது மன்றொன்று.

அமைச்சர் ஒரு பெண்ணாகவும் அல்லாமல் தன்மை அதீதமாக அழகு படுத்தும் பண்பும் அற்றவராதலால் மேற்கூறிய அறிவுரையை வழங்கி இருந்தார்.

தற்காலப் பெண்கள் உழைப்பவர்களாக இருந்தாலும். கணவர். பெற்றோர் உழைப்பில் வாழ்பவராக இருந்தாலும் அழகு சாதனப் பொருட்களுக்கு மிகக் கூடிய விலையே குடுத்து வருகிறார்கள் என்பது வெளிப்படை.

ஒவ்வொருவரும் தம்மைத் திரை நட்சத்திரங்களாக மாற்றிக் கொள்வதில் அதீத கவனமெடுத்துக் கொண்டிருப்பதும். அதனால் அழகு சாதனப்பொருட்கள் விற்பனை செய்கின்ற நிலையங்கள் அதிகரித்த வண்ணம் இருப்பதும் கண்கூடு.

பட்ட பின்பே அனைவருக்கும் படிப்பறிவு ஏற்படுவது இயல்பு. அதற்கு சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பதற்கேற்ப ஆள்தப்ப வேண்டுமே!

மின்சக்தி அமைச்சரின் மின்சாரம் பேன்ற அறிவுறுத்தல் ஊத்தை போன்று ஒட்டிக்கொள்ளுமா பசிதீர்ந்தது போலவே நீங்கி விடுமா? என்ன நான் சொல்லுறே...

5) What is the date of the national day?

(5x3= 15 Marks)

**04) Write the English meaning for the following sentences.**

1) நான் வகுப்பறையைக் கூட்டுவேன் ..............................

2) தயவுசெய்து படலையை மூடுங்கள். ..............................

3) தயவுசெய்து விரைவுபடுத்துங்கள். ..............................

4) நாங்கள் பாடல் ஒன்று பாடுவோமா? ..............................

5) தயவுசெய்து ஒரு அடிமட்டம் தரவும். ..............................

(5x3= 15 Marks)

**05) Write the English words for the followings Tamil words.**

1) காலநிலை ....................
2) வலை ....................
3) அதிபர் ....................
4) பாடம் ....................
5) முத்திரை ....................
6) கோலம் ....................

(6x2= 12Marks)

**06) Write the Tamil words for the followings English words.**

1) Love --------------------------
2) Please --------------------------
3) Sorry --------------------------
4) Behind --------------------------
5) Before --------------------------
6) Week --------------------------

(6x2= 12Marks)

**07) Write four sentences about "My Father"**

(5x2= 10Marks)



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1 மணி 30 நிமிடம்

# கல்வி முரசு



ஆசிரியர் :- வ.சிவனேசன் B.A. Dip.in.Edu, S.L.P.S 2 -II

**01) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) காற்று மூலம் பரம்பலடையும் வித்துக்களைக் கொண்ட கூட்டம்.
   1) புலிநகம், ஆமணக்கு, நாயுருவி  2) எருக்கலை, வேங்கை, தணக்கு
   3) வெடிபலவன், காசித்தும்பை, றப்பர்  4) தாமரை, தேங்காய், புண்ணை

2) கீழே உள்ள தாவரங்களில் ஆணிவேருள்ள மரம் எது?
   1) கித்துள்  2) தென்னை
   3) பனை  4) பப்பாசி

3) நத்தை முட்டையின் நிறம் என்ன?
   1) வெள்ளை  2) இளம்மஞ்சள்
   3) கறுப்பு  4) சிவப்பு

4) குழந்தைப் பருவத்தில் பால் குடித்து வளரும் பறவை எது?
   1) தீக்கோழி  2) ஆந்தை
   3) வௌவால்  4) ஆட்காட்டிக்குருவி

5) உலர்த்தப்பட்ட ஈரப்பலாக்காயை பொதி செய்யும் போது பொதியினுள் எது உட்செல்வதைத் தடுக்க வேண்டும்?
   1) வளி  2) வெப்பம்
   3) சூரிய ஒளி  4) குளிர்

6) இலங்கையிலுள்ள எழுத்தாளர்களின் படைப்புக்களை பதிந்து வைத்து புலமைச் சொத்துரிமையை பாதுகாக்கும் அமைப்பின் குறியீடு.
   1) ISBN  2) SLA
   3) ISO  4) LLO

7) இலங்கை அரச இலட்சனையில் காணப்படுவன.
   1) தர்மசக்கரம், சூரியசந்திரர், நீல அல்லி, நிறைகலசம், மலரிதழ், நெற்கதிர்
   2) சூரியசந்திரர், காட்டுக்கோழி, நாகமரம், நெற்கதிர், மலரிதழ், தர்மசக்கரம்.
   3) தர்மசக்கரம், சிங்கம், நெற்கதிர், மலரிதழ், நிறைகலசம், சூரியசந்திரர்
   4) நிறைகலசம், சூரியசந்திரர், நாகமரம், சிங்கம், தேசியக்கொடி, நெற்கதிர்.

8) பகல்வேளையைவிட இரவுவேளைகளில் அதிகளவு விபத்து ஏற்படக் காரணம்?
   1) வெளிச்சமின்மை  2) சாரதிகளின் கவலையீனம்
   3) பாதசாரிகளின் கவலையீனம்  4) வனவிலங்குத் தாக்கம்


9) ஆடையிற் படிந்த தார்க் கறையை கழுவி நீக்குவதற்கு உகந்தது எது?
   1) வெந்நீர்  2) மதுசாரம்
   3) எலுமிச்சஞ்சாறு  4) மண்ணெண்ணெய்

10) இலங்கையிலுள்ள மிக அழகான நீர்வீழ்ச்சி எது?
   1) துன்கிந்த  2) பம்பரகந்த
   3) விக்டோரியா  4) தியலும

(10x3= 30 புள்ளிகள்)

02) பின்வரும் பிராணிகளின் படங்களை இனங்கண்டு எழுதுக.

i. 

ii. 

iii. 

iv. 



(5x3= 15 புள்ளிகள்)

03) அன்னியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் சுதந்திரத்திற்காக உழைத்தவர்களின் படங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்குரியவர்களை இனங்கண்டு எழுதுக.

i. 

ii. 

iii. 

iv. 

v. 


(5x3= 15 புள்ளிகள்)

04) சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் எழுதுக.

1) இலங்கை பௌத்த மக்களின் புனித மரமாக அரசமரம் பேணிப் பாதுகாக்கப்படுகின்றது. ( )
2) மிகவும் வேகமாக ஓடும் பிராணி சிறுத்தை அதே போல் மிக மெதுவாகச் செல்லும் பிராணி அட்டை ( )
3) பாவனைக்கு உதவாத மீனின் பூவிதழ் வெளுறிக் காணப்படும் ( )
4) மிதமிஞ்சி பழங்கள் கிடைக்கும்போது அவற்றிலிருந்து பழப்பாகு, பழச்சாறு போன்றவற்றைத் தயாரிப்பதில்லை ( )
5) இலங்கையில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் வடக்கு - கிழக்கில் அதிகளவு உள்ளன. ( )

(5x4= 20 புள்ளிகள்)

05) பின்வரும் படங்களால் காட்டப்படும் தையல் முறைகளையும் அதன் பயன்களையும் எழுதுக.

| படங்கள் | தையல்முறை | பயன்கள் |
|---|---|---|
| i.  | | |
| ii.  | | |
| iii.  | | |
| iv.  | | |

(4x5= 20 புள்ளிகள்)



# ENGLISH

01) **Read and write short answer.**



**Muttiah Muralitharan** has been named the word's No.1 bowler by many cricket magazines. He has helped the Sri Lankan cricket team to win many matches. He is very good at fielding too. He is from Kandy and studied at St.Anthony's College. Kattugastota.

1) Which the team participate with Muththaiya Muralitharan
2) Where is Muralitharan from?
3) Who is your favorite player?
4) Is Muralitharan a world's No 1 bowler?
5) Where he studied?

(5x4= 20 Marks)

02) **Write the present tense for the following verbs.**

| Past | Present |
|---|---|
| Run | |
| Sang | |
| Jumped | |
| Drove | |
| Bought | |

(5x4= 20 Marks)

03) **Test your general knowledge.**

1) What is the capital of Sri Lanka?
2) Which country is famous for 11th floating market?
3) Name the town in Sri Lanka famous for making masks?
4) What is tha name of the Sri Lanka's president?

# பீற்றர்சன் நீக்கம்



(லண்டன்)

நியூசிலாந்து அணியுடன் டெஸ்ட்தொடரில் மோதவுள்ள இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிரடி வீரர் கெவின் பீற்றர்சன் நீக்கப்பட்டுள்ளதுடன் சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான், அனுபவ வேகம் பிரெஸ்னன் இருவரும் அணிக்குத் திரும்பியுள்ளனர்.

இங்கிலாந்து சென்றுள்ள நியூசிலாந்து அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 2 ருவென்ரி-20 போட்டிகளில் விளையாடவுள்ளது. முதலில் டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. காயத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு ஓய்வெடுத்து வந்த ஸ்வான், பிரெஸ்னன் இருவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அலஸ்டர் குக் தலைமையிலான அணியில் மொத்தம் 12 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

முதல் டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் மே 16ஆம் திகதியும், இரண்டாவது டெஸ்ட் லீட்ஸ் மைதானத்தில் (மே 24,28) நடைபெறவுள்ளது. அணி விபரம் : குக் (கப்டன்), நிக் கம்ப்டன், ஜொனாதன் ட்ரொட், இயன் பெல், ஜோ ரூட், ஜொனி பேர்ஸ்டாவ், மட் பிரையர், ஸ்டுவட் புரொட், ஸ்வான், ஸ்டீவன் பின், ஜேம்ஸ் அண்டர்சன், ரிம் பிரஸ்னன்.

# கிறிஸ்டனுக்குப் பதில் டோமிங்கோ



(ஜோகனஸ்பேர்க்)

கிறிஸ்டன் ஓய்வுக்குப் பின்னர் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக ரஸ்செல் டோமிங்கோ நியமிக்கப்படுவார் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. 2011ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் அணி உலக கிண்ணத்தைக் கைப்பற்றியதும், இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து கிர்ஸ்டன் ஓய்வு பெற்றார்.

இந்திய அணியில் இருந்து விலகிய சில மாதங்களிலேயே, தனது சொந்த நாடான தென்னாபிரிக்க அணியின் தலைமைப் பயிற்சியாளராக கிறிஸ்டன் நியமனம் செய்யப்பட்டார். அவரது 2 ஆண்டுகால ஒப்பந்தம் வருகிற ஓகஸ்ட் மாதத்துடன் முடிவடைகிறது. இந்நிலையில் கிறிஸ்டனின் ஒப்பந்தத்தை மேலும் 2 ஆண்டுகள் நீடிக்க தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை விரும்பியது. ஆனால் கிறிஸ்டன் தனது குடும்பத்துடன் அதிக நேரம் செலவிட விரும்புவதாகக் கூறி இதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டார். அவர் இந்த அறிவிப்பினை வெளியிட்டார். இதன் காரணமாக புதிய பயிற்சியாளராக ரஸ்செல் டோமிங்கோ நியமிக்கப்படுவார் என்ற அறிவிப்பை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது. கிறிஸ்டனின் உதவியாளராக ரஸ்செல் இரண்டு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். மேலும் கடந்த டிசம்பர் மாதம் முதல் தென்னாபிரிக்காவின் ருவென்ரி–20 கிரிக்கெட் அணியின் பொறுப்பாளராகவும் செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எப்.ஏ. கிண்ணம் விகான் அத்லெடிக் அணி வசம்



எப்.ஏ., கிண்ணக் கால்பந்து தொடரில் விகான் அத்லெடிக் அணி சம்பியன் பட்டம் வென்றது. இங்கிலாந்தில், உள்ளூர் கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும், புட்பால் அசோசியேஷன் (எப்.ஏ.,) சாலஞ்ச் கிண்ணக் கால்பந்து தொடர் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டி மான்செஸ்டர் சிட்டி, விகான் அத்லெடிக் அணிகள் மோதின. போட்டியின் முதற் பாதியில் இரு அணி வீரர்களின் கோல் முயற்சியும் கைகொடுக்க வில்லை. இதனால் போட்டி 0–0 என சமநிலை வகித்தது. பின் இரண்டாவது பாதியின் கடைசி நிமிடத்தில் விகான் அத்லெடிக் அணிக்கு வாட்சன் (90.1 நிமிடத்தில்) போராடி ஒரு கோல் அடித்தார். இதற்கு மான்செஸ்டர் சிட்டி அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை. ஆட்டநேர முடிவில், விகான் அத்லெடிக் அணி 1–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதல் முறையாக சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றது.

# செரீனா – ஷரபோவா இறுதியில் பலப்பரீட்சை



(மட்ரிட்)

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் விளையாட, நட்சத்திரவீராங்கனைகள் செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), மரியா ஷரபோவா (ரஷ்யா) தகுதி பெற்றனர்.

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகின்றது. இதன் பெண்கள் ஒற்றையர்பிரிவு அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலாவது அரையிறுதியில் இத்தாலியின் சாரா எர்ரானியுடன் மோதிய செரீனா 7,5 என்ற கணக்கில் முதல் செட்டை போராடி வென்றார். இரண்டாவது செட் தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய அவர் எர்ரானியின் சர்வீஸ் ஆட்டங்களை முறியடித்து 7,5, 6,2 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இப்போட்டி ஒரு மணி 33 நிமிடம் மட்டுமே நீடித்தது.

மற்றொரு அரை இறுதியில் சேர்பியாவின்அனா இவானோவிச்சுடன் மோதிய ஷரபோவா 6,4, 6,3 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இறுதிப் போட்டியில் முன்னணிவீராங்கனைகள் செரீனா, ஷரபோவாமோதுவதுரென்னிஸ்இரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிம்பாப்வே த்ரில் வெற்றி



பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது ருவென்ரி–20 போட்டியில் சிம்பாப்வே அணி நான்கு ஓட்டங்களால் த்ரில் வெற்றிபெற்றது. சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக்கொண்ட ருவென்ரி–20 கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் சிம்பாப்வேயில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சிம்பாப்வே அணி மசகட்ச, பி. ரெய்லர் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சிம்பாப்வே அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மசகட்ச 59, பி. ரெய்லர் 40, வெலர் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஷகிப் அல் ஹசன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 169 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி இரண்டு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதல் விக்கெட்டைப் பறிகொடுத்துத் தடுமாறியது. இந்நிலையில் முதலாவது விக்கெட்டுக்காக இணைந்த ஷகிப் அல் ஹசன் எஸ். ரஹ்மானுடன் இணைந்து பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இந்த ஜோடி சிம்பாப்வே அணியின் பந்து வீச்சாளர்களைப் புளந்துகாட்டி அணியின் வெற்றி வாய்ப்பினை இலகுபடுத்தியது. இருப்பினும் 118 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய கப்டன் ரஹீம் சிறிது நேரம் தாக்குப் பிடித்தபோதும், தொடர்ந்து பங்களாதேஷ் அணியின் விக்கெட்டுக்கள் மளமளவென சாய்க்கப்பட்டன. இது போட்டியில் திருப்புமுனையாக அமைந்ததுடன் சிம்பாப்வே அணியின் வெற்றியையும் உறுதிசெய்தது. இறுதியில் பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப்பெற்று நான்கு ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் ஷகிப் அல் ஹசன் 69, எஸ். ரஹ்மான் 53, எம். ரஹீம் 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். மற்றைய சகல வீரர்களும் ஒற்றை இலக்கத்துடன் வெளியேறி ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் பஞ்ஜங்கர மூன்று, உஸ்தயா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக மசகட்ச தெரிவானார்.

## இன்றைய ஆட்டம்




மும்பை இந்தியன்ஸ் எதிர்
சன் ரைடர்ஸ்
இடம்: மும்பை
இரவு 8.00 மணி

# பெங்களூருக்கு பதிலடி கொடுத்தது கொல்கத்தா



(ரஞ்சி)

சுனில் நரைன், பாலாஜி, கலிஸ் ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி பதிலடி கொடுத்தது.

ஆறாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 60ஆவது ஆட்டம் நேற்று ரஞ்சியில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதல் விக்கெட்டை இழந்து தடுமாறியது. இந்நிலையில் முதலாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் ஹோலி கிறிஸ் கெய்லுடன் இணைந்து நிதானமாக ஆட முற்பட்டார். சிறிது நேரம் தாக்குப் பிடித்த இந்த ஜோடி 31 ஓட்டங்களைப் பெற்றவேளை (ஹோலி) பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய டி. வில்லியர்ஸ் கிறிஸ் கெய்லுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆடினார். இந்த ஜோடி வான வேடிக்கை நிகழ்த்தும், குறிப்பாக, கிறிஸ் கெய்ல் அசத்துவார் என ஆவலுடன் அரங்கில் அமர்ந்திருந்த இரசிகர்கள் , எதிர்பார்த்துப் பார்த்து கண் அசந்தனரே ஒழிய அதிரடி தொடரப்படவில்லை. மாறாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பந்து வீச்சில் திணறிய இந்த ஜோடி ஒற்றை ஓட்டங்களையே சேகரித்த வண்ணமிருந்தது. இந்நிலையில் சுனில் நரைனின் சுழலில் சிக்கி கிறிஸ் கெய்ல் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து கடைசி நம்பிக்கைக்குரிய வீரராக டிவில்லியர்ஸும் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து தள்ளாடிய பெங்களூர் வீரர்கள் வருவதும் போவதுமாக தமது விக்கெட்டைத் தாரைவார்த்துவிட்டு வெளியேறினர். இறுதி யில் பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் கெய்ல் 33, டிவில்லியர்ஸ் 28, ஹோலி 17 ஓட்டங்களைப் பெற்றனர். வினய்குமார் ஆட்டமிழக்காது 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சுனில் நரைன் 22 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, கலிஸ், பாலாஜி தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 116 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ஓட்டமெதுவும் பெற்றுக்கொள்ளாத நிலையில் முதல் விக்கெட்டைப் பறிகொடுத்தது. தொடர்ந்து களமிறங்கிய கலிஸ் கம்பீருடன் இணைந்து நிதானமாக ஆடினார். இருப்பினும் இந்த ஜோடி 31 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய யூசுப் பதான் கலிஸுடன் இணைந்து நிதானமாக ஆடியபோதும், இந்த ஜோடியும் 30 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. அடுத்து களமிறங்கிய மனோஜ் திவாரி கலிஸுடன் இணைந்து பொறுப்புடன் ஆடினார். இந்த ஜோடி 35 ஓட்டங்களைப் பெற்றவேளை கலிஸின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. தொடர்ந்து மனோஜ் திவாரியின் விக்கெட்டும் சாய்க்கப்பட போட்டியில் பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய டென் டஸ்காத், பாட்டிஜா இணை பொறுமையாக ஆடி வெற்றியை உறுதி செய்தது. இறுதியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 19.2 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கலிஸ் 41, திவாரி 24, யூசுப் பதான் 18, கம்பீர் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வினய்குமார் இரண்டு, முரளி கார்த்திக், ராம்போல் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் கடந்த ஆட்டத்தில் அடைந்த தோல்விக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி பழிதீர்த்துக்கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக சு[illegible] தெரிவானார்.

# வெளியானது தேர்தல் முடிவுகள்; நவாஷின் கட்சிக்கு அமோக வெற்றி



(பாக்கிஸ்தான்)

முதன் முறையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு 5 ஆண்டுகள் பூர்த்தி செய்ததுடன் பாராளுமன்ற தேர்தலையும் நடத்தியதால் இது வரலாற்று சிறப்புமிக்க தேர்தலாக உலக நாடுகள் கவனத்தை ஈர்த்தது. பெனாசிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி, நவாஸ் செரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் கட்சி, இம்ரான்கானின் தெக்ரீக்-இ- இன்சாப் கட்சிகள் இடையே மும்முனைப் போட்டி நிலவியது.

மொத்தம் உள்ள 272 தொகுதிகளுக்கு நேற்று முன்தினம் வாக்குப்ப திவு நடந்தது. தீவிர வாதிகளின் கடும் மிரட்டலுக்கு இடையே வாக்குப்பதிவு நடந்தது.

எனறாலும் பாகிஸ்தானில் 4 இடங்களில் நேற்று முன்தினம் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந்தன. இதில் 16 பேர் பலியானார்கள். மாலை 5 மணியுடன் ஓட்டுப் பதிவு முடிவடைந்தது. இதில் 60 சதவீதம் வாக்குகள் பதி வானது. கடந்த தேர்தலில் 44.5 சதவீத வாக்குப்பதிவானது.

வாக்குப்பதிவு முடிந்ததும் உடனே வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. இதில் நவாஸ் செரீப்பின் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சி பெருவாரியான இடங்களில் முன்னணியில் இருந்தது.

நள்ளிரவு வரை வாக்குககள் எண்ணப்பட்டதில் நவாஸ் செரீப் கட்சிக்கு 110 இடங்கள் கிடைத்தது. நேற்று காலையில் 263 தொகுதிகளின் வாக்குகளும் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியானது.

இதில் நவாஸ் செரீப் கட்சிக்கு 130 இடங்கள் கிடைத்தன. ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி இந்த தேர்தலில் படுதோல்வி அடைந்ததுடன் 3 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. அந்த கட்சிக்கு 35 இடங்களில் மட்டுமே வெற்றி கிடைத்தது.


முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கானின் தெக்ரீக்-இ-இன்சாப் கட்சி 37 இடங்களில் வெற்றி பெற்றது. 2 ஆவது இடத்துக்கு முன்னேறியது.

சிறிய கட்சிகள், சுயேச்சைகள் 61 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர். பாகிஸ்தானில் ஆட்சி அமைக்க வேண்டுமானால் 137 இடங்கள் தேவை. நவாஸ்செரீப் கட்சிக்கு தனி மெஜாரிட்டிக்கு 7 இடங்களே தேவைப்படுகிறது.

இன்னும் 9 தொகுதி முடிவுகள் மட்டுமே வரவேண்டும். எனவே நவாஸ் செரீப் மீண்டும் ஆட்சி அமைப்பது உறுதியாகிறது. தேர்தல் முடிவுகள் இன்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

உலகச் செய்திகள்

# வெள்ளை மாளிகையில் கரும்புகையால் பரபரப்பு



(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் மாளிகையில் கரும்புகை எழுந்ததைத் தொடர்ந்து அங்கிருந்தவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையின் மேற்குப்பகுதியில் சனிக்கிழமை காலையில் திடீரென்று கரும்புகை வெளிவந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து, எச்சரிக்கை மணி ஒலித்தது.

உஷாரான பாதுகாப்பு அதிகாரிகள், அப்பகுதியில் இருந்த நிருபர்களையும், புகைப்படக் கலைஞர்களையும் பாதுகாப்பாக வெளியேற்றினர். இதனிடையே, அங்குள்ள மின்மாற்றி சாதனத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே புகை வந்தது கண்டறியப்பட்டது.

உடனடியாக அந்தக் கோளாறு சரிசெய்யப்பட்டது என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையின் மேற்குப் பகுதிக்கு மின்சார இணைப்பை மீண்டும் அளிக்கப் பட்டதாகவும், அதிபர் குடும்பத்தாருக்கு எந்தபாதிப்பும் ஏற்பட வில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாப்பரசர் வேடமிட்டவர் கைது

மறைந்த பாப்பரசர் இரண்டாம் ஜான் பால் போல் வேடமிட்டு வந்த நபரை ரோம் நகரில் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

ஸ்லோவோகியாவைச் சேர்ந்த தெருக்கூத்து கலைஞரான கரோல் வொய்ட்லா என்பவர் பாப்பரசர் இரண்டாம் ஜான் பால் போன்று வேடமிட்டிருந்தார்.

இதையடுத்து ரோம் நகர பொலிஸார் அவரை கைது செய்து அபராதம் விதித்தனர்.

பாப்பரசர் போல் அவர் அணிந்திருந்த உடைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

# கார்க்குண்டு வெடிப்பு துருக்கியில் 43 பேர் பலி




(துருக்கி)

துருக்கியில் சிரிய எல்லைப் பகுதியில் உள்ள ரெகான்லி நகரில் நேற்று இடம்பெற்ற கார் குண்டுத் தாக்குதலில் 43 பேர் பலியாகினர். மேலும் 140 பேர் காயமடைந்துள்ளனர்.

துருக்கியில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற மோசமான தாக்குதல் இதுவாகும். சிரியாவில் உள்ள ஆயுதக் குழு அல்லது சிரிய இராணுவப் புலனாய்வாளர்களே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்புக்கு சற்று முன்னர் சிரிய எல்லைப் பகுதியில் இருந்து சில மோட்டார் குண்டுகள் ஏவப்பட்டுள்ளன

# நியுசிலாந்து அருகே பாரிய நிலநடுக்கம்




"டோங்கா" பசிபிக் பெருங் கடல் பகுதியில் அமைத்துள்ள 176 தீவுகளை உள்ளடக்கிய ஒரு தீவு நாடு ஆகும்.

இந்நாடு நியூசிலாந்துக்கு வடகிழக்கே 2 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இந்திய நேரப்படி நேற்று அதிகாலை 2.16 மணியளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது ரிக்டர் அளவுகோலில் 6.5 புள்ளியாகப் பதிவாகியுள்ளது. டோங்கர் நாட்டின் நையாபு நகரத்தில் இருந்து 139 கிலோமீட்டர் தொலைவில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.

பூமிக்கடியில் 205 ஆழத்தில் ஏற்பட்டது.


நில நடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப் படவில்லை.

உயிரிழப்புகள் மற்றும் பொருட்சேதம் குறித்த தகவல்கள் இல்லை.



காவல் மற்றும் உளவுத் துறையில் சிறந்து விளங்கும் அதிகாரிகளுக்கு பாராட்டு தெரிவிக்கும் விதமாக, அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நியூயோர்க் பொலிஸ் உயரதிகாரியிடம் கைகுலுக்கும் அதிபர் பாரக் ஒபாமா.

# பஸ் மீது ரொக்கெட் தாக்குதல்; பாகிஸ்தானில் 10 பேர் பலி



பாகிஸ்தானின் பலூசிஸ்தான் பகுதியில் சுயேட்சை வேட்பாளராக சையத் காதிம் ஹுசேன்ஷா போட்டியிட்டார்.

நேற்றிரவு இவரது ஆதரவாளர்கள் நசீராபாத் மாவட்டத்தின் சத்தார் அருகே உள்ள ஓட்டு எண்ணும் இடத்திற்கு ஒரு பஸ்சில் சென்றுக் கொண்டிருந்தனர்.

பஸ்ஸை வழிமறித்த தீவிரவாதிகள் ராக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினார்கள். இந்த தாக்குதலில் பஸ் எரிந்து நாசமடைந்தது.

சம்பவ இடத்திலேயே 10 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர். 15 பாடுகாயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக டேரா ஜமாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

# ஆயுர்வேத சட்டத்தை திருத்துமாறு வலியுறுத்து

1961 ஆம்ஆண்டு 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டம் காலாவதியாகியுள்ளதால் அதனை தற்போதைய காலத்திற்கு தகுந்தவாறு திருத்தியமைக்க வேண்டும் என அகில இலங்கை ஆயுர்வேத வைத்தியர்களின் சங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அந்தச் சட்டத்தின் ஊடாக ஆயுர்வேத ஆய்வு நிறுவனம் தேசிய வைத்திய நடைமுறை தொடர்பான சுதேச வைத்திய முறைமைகளுக்கான தேசிய நிலையம் உள்ளிட்டவர்களின் காணிகளை விற்பனை செய்வதற்காக அவற்றிற்குரிய வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் டாக்டர் கே.பி.ஆர்.எஸ்.குணரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன். ஆய்வு நிறுவனம். தேசிய வைத்திய நடைமுறை தொடர்பான தேசிய நிறுவனம் ஆகியவற்றைச் சுயாதீன நிறுவனங்களாக மாற்றுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். 1996 ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலணி மற்றும் இந்தத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத சட்டமூலமொன்று உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் குறித்து ஆயுர்வேத ஆணையாளார் பாலித்த வீரக்கோன் தெரிவிக்கையில்.

1996 ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலணி மற்றும் துறையில் தேர்ச்சி பெற்றவர்களின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர கூறினார்.

### உள்ளக...

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு. ஆனால், உள்ளக பேச்சுக்கள் அவர்களால் ஏற்றுக கொள்ளப்படத்தக்கதாக இருக்கவேண்டும். இந்தியா ஒருபோதும் இலங்கைக்கு ஆணையிடுகின்ற வகையில் செயற்படாது. அது எமது அணுகுமுறையல்ல என்றும் அசோக் கே காந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

### கஜேந்திரகுமாரின்...

உரையாடப்பட்டது. தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் என்ன? என்பது தொடர்பிலான திட்டவரைபை உருவாக்குவதற்கான குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அமைப்பின் இணைப்பாளர் குருபரன் ஆகியோர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது.

குறித்த குழுவினால் சமர்ப்பிக்கப்படும், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான ஆலோசனை வரைபுகள் எதிர்வரும் யூன் மாதம் 8 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள அடுத்த கூட்டத்தின் போது விரிவான விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

யூன் மாதம் நடைபெறும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் தீர்வுத் திட்டம் தொடர்பிலான ஆலோசனை வரைபு தொடர்பிலான இணக்கத்தின் அடிப்படையிலேயே தொடர்ந்தும் இணைந்து செயற்படுவதா அல்லது தனித்துச் செயற்படுவதா என்பது தொடர்பில் முடிவு செய்யப்படும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய பொதுச் சபை ஒன்றை அமைப்பது தொடர்பிலும் அதனூடாக மக்களுக்கான இணைந்த வேலைத்திட்டங்களை முன்வைக்கமுடியும் என்றும் ஆலோசனை ஒன்று சிவில சமூகத்தால் முன்வைக்கப்பட்டு அதற்காக உறுப்பினர்களை நியமிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன்போது உடனடியாக அதற்கான உறுப்பினர்களை நியமிக்கமுடியாது என்றும் அது தொடர்பில் பலருடன் ஆலோசனை நடத்தவேண்டியுள்ளதாகவும் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் மறுப்புத் தெரிவித்ததாக நிகழ்வில் கலந்து கொண்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பிலும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ள குறைபாடுகள் உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பிய போது இரா.சம்பந்தன் பதிலளிக்க முடியாது திக்குமுக்காடிப் போயிருந்ததாகவும் உரிய வகையில் பதிலளிக்கமுடியாமல் மழுப்பல் பதில்களை வழங்கியதாகவும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரவித்திருக்கின்றனர்.

### உழவு இயந்திரம்...

20 பேர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உரும்பிராயைச் சேர்ந்த இ.பார்த்தீபன் (வயது-29), நாவற்குழியைச் சேர்ந்த ந.நாகதீபன் (வயது-24), புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த க.புஸ்பநாதன் (வயது-29) கோண்டா விலைச் சேர்ந்த க.கலியுகவரதன் (வயது-43), திருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.டயஸ் (வயது-19), மானிப்பாயைச் சேர்ந்த தே.அஜித் கேசி (வயது-19), திருநெல்வேலியைச் சேர்ந்த செ.செந்தில்வேள் (வயது-30) வேலணை கிழக்கைச் சேர்ந்த நா.விஷ்ணுமூர்த்தி (வயது-24), ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நி.சுதீசன் (வயது-28), யாழ். திரு நகரைச் சேர்ந்த எஸ்.செல்வ குமார் (வயது-33), நாவற்குழி யைச் சேர்ந்த அ.கமலேஷ் (வயது-42), உரும்பிராயைச் சேர்ந்த கு.சதீஸ் (வயது-23), கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த த.விவேகானந்தன் (வயது-40) மானிபாயைச் சேர்ந்த த.சந்திரசேகரன் (வயது-19) ஆகியோர் உட்பட 20 பேர் வரையில் காயமடைந்துள்ளனர். இவ்விபத்துக் குறித்து யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

நல்லூர் பின் வீதியிலுள்ள வளைவில் திரும்பியபோது ஊழியர்கள் ஒரே பக்கம் நின்றமையால் உழவு இயந்திரப் பெட்டி புரண்டு இவ்விபரீதம் நேர்ந்ததாகக் காயமடைந்தவர்கள் தெரிவித்தனர். (இ)

### 19 ஆவது...

ஆரம்பித்துள்ளன. விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த 19 ஆவது சட்டத்திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாக குறைக்கப்படவுள்ள்தாகவும், இனபபிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு, அதிகாரப் பகிர்வு உட்பட பல விஷயங்கள் 19 ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் தீர்க்கப்படும் என்று அரசாங்கம் கூறுகின்றது.

இந்த நிலையில் மாகாண சபைகளின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் அல்லது இல்லாது ஆக்கும் என்ற காரணத்தாலேயே 19 ஆவது திருத்தத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்காது என்று அதன் பொதுச்செயலர் ஹஸன் அலி பி.பி.சி தமிழோசையிடம் தெரிவித்தார். தமது கட்சி 13 ஆவது அரசியல் திருத்தத்தில் கை வைப்பதற்கு எந்த வகையிலும் துணை போகாது எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது இருக்கின்ற 13 ஆவது சட்டத் திருத்தமே முழுமையான அதிகாரப் பரவலாக்கம் அல்ல என்பதே தமது கட்சியின் நிலைப்பாடாகும் எனவும் ஹஸன் அலி தெவித்தார்.

நாட்டின் நீதித்துறை அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் 19 ஆவது திருத்தச் சட்டத்தை முன்மொழிந்தாலும் அதை தமது கட்சி எதிர்க்கும் எனவும் ஹஸன் அலி மேலும் தெரிவித்தார்.

### இராணுவ...

வடக்கில் யுத்தத்தால் கடு மையாகப் பாதிக்கப்பட்ட மக்க ளிடம் அரசியல்வாதிகள் அன்பாக நடந்துகொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுளளார்.

இதேவேளை, தமிழகத்தில் எழுந்துள்ள மாணவர் போராட்டம் 1970 காலத்தை தனக்கு ஞாபகப் படுத்துவதாக தெரிவித்துள்ள கே.பி, அந்தக் காலத்தில் புலிகள் மாணவர்களை தங்கள் இயக்கத்திற்கு இணைக்க மூளைச்சலவை செய்தார்கள் என்றும் கூறியுள்ளார்.

தமிழக அரசியல்வாதிகள் உணர்வுபூர்வமான பிரச்சினையைக் கிளப்ப முயற்சிக்கின்றனர். மாணவர்கள் தங்கள் கல்வி மீது கவனம் செலுத்த வேண்டும். அரசியல்வாதிகள் அவர்களாக எதுவும் செய்யமாட்டார்கள். அவர்கள் மத்திய அரசுடன் இணைந்து இலங்கைக்கு உதவி செய்ய வேண்டும்.

தமிழகத்தில் புத்த பிக்குகள் தாக்கப்பட்டமை அடக்கமற்ற, மனிதாபிமானமற்ற செயல் எனத் தெரிவித்த கே.பி, அதன் மூலம் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு மேலும் பாதிப்பு ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் விபத்து மூவர் காயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் இருவேறு இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் 3 பேர் காயமடைந்துள்ளனர். புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் உள்ள தருமபுரம் பகுதியில் பழுதடைந்த வாகனம் ஒன்றை இழுத்துவந்த உழவு இயந்திரத்தின் மீது பின்னால் இழுத்து வரப்பட்ட வாகனம் மோதியதால் உழவு இயந்திரத்தின் சாரதி காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று பூநகரி - பரந்தன் வீதியில் வீதி அகலிப்பு பணிக்காக மண் ஏற்றி வந்த டிப்பர் ஒன்று கவிழ்ந்ததில் அதில் இருந்த சாரதியும் அதன் உதவியாளரும் காயமடைந்துள்ளனர்.

# சட்டவிரோத மண் அகழ்வு வரணிப் பகுதியில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வரணி நாவற்காடு வெங்கிராயன் வயல்வெளிகளில் பெருமளவான பகுதிகளில் சட்டத்திற்குப் புறம்பான வகையில் மண் அகழ்வு நடைபெறுகின்றது. இப்பகுதியில் உள்ள வயல் நிலங்கள், வயல் வரம்புகள் முதலானவற்றில் உள்ள மண்களை வெட்டி ஏற்றி உழவு இயந்திரங்கள் மூலமாக வெளியிடங்களிற்குக் கொண்டு சென்று விற்பதனைக் காணமுடிகின்றது. தொடர்ந்து இவ்வாறு மணல் அகழ்வதனால் கடல்நீர் வயல் நிலங்களிற்குள் உட்புகுந்து வயல் நிலங்கள் உவராக மாறும் அபாயம் உள்ளது.

மேலும் இவ் உழவு இயந்திரங்கள் இரவு வேளைகளிலும் அதிகாலை வேளைகளிலும் மணல் ஏற்றிக்கொண்டு மோட்டார் சைக்கிளின் துணையுடன் வீதியினைக் கடந்து செல்வதனைக் காணமுடிகின்றது. எனவே சம்பந்தப்பட்ட பகுதிகளில் தொடர்ந்தும் மணல் அகழ்வு நடைபெறாமல் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

### அதிகரிக்காது...

சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்த்தன தெரிவிக்கையில்,

மின்கட்டணத்தில் அதிகரிப்பு ஏற்பட்டாலும் பாணின் தற்போதைய விற்பனை விலையில் எவ்வித உயர்வும் ஏற்படமாட்டாது. கோதுமை மாவின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டால் மட்டுமே வெதுப்பக உற்பத்திகளில் குறிப்பாக பாணின் விலையில் மாற்றம் ஏற்படும்.

எனவே மின்கட்டண அதிகரி ப்பைப் பயன்படுத்தி எவராவது வெதுப்பக உற்பத்திகளின் விலைகளை அதிகரித்து விற்பனை செய்தால் அது குறித்து தகவல் தருமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

### கூட்டமைப்பை...

தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் 5 கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மன்னார் ஞானோதயம் மண்டபத்தில் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவது தொடர்பாக நடாத்திய சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்ளுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு அவர் தொவித்தார்.

இதேவேளை, இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதில் இணக்கப்பாடு ஏற்படவில்லை எனத் தெரிவித்திருந்ததுடன் தமிழரசுக்கட்சி தனது நிலைப்பாட்டில் இருந்து மாறாவில்லை என்றும் அவர் தெரிவித்தார். இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பாக எவ்வித முடிவும் எடுக்கப்படாது சந்திப்பு நிறைவடைந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

### யூன் மாத...

இவரது நியமனத்தை அரசாங்கம் இரண்டு வாரங்களுக்கு முன்னர ஏற்றுக்கொண்டுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சின் ஒரு துறைசார் அதிகாரியாக உள்ள வை.கே.சிங், பாரதீய ஜனதா கட்சி ஆட்சியின் போது, ஜம்மு-காஷ்மீர் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த, மூத்த இந்திய இராணுவ அதிகாரி லெப்.ஜெனரல் எஸ்.கே.சிங்கின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, தற்போதைய இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தாவும், பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவின் மருமகன் என்பது ஆச்சரியமான ஒற்றுமையாகும்.

## – மாத்தளை மனித எச்சங்கள் –

# 13பேரின் வாக்குமூல அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

மாத்தளை மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக மாத்தளை நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்த 13 பேரின் வாக்கு மூலங்களை பதிவு செய்து அது தொடர்பான அறிக்கையை எதிர்வரும் 31 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதவான் மாத்தளைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் மாத்தளை வைத்தியசாலை வளவில் கட்டட நிர்மாணப் பணிகளுக்காக நில அகழ்வு மேற்கொள்ளப்பட்ட போது அதில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதில் சுமார் 154 மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இவை எக்காலத்தில் புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகள் என கண்டு பிடிக்க பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 1987 - 1990 இற்கு இடைப்பட்ட காலங்களில் புதைக்கப்பட்டவையாக இருக்கக் கூடும் எனத் தீர்மானிக்கப்பட்டது.


இதனையடுத்து மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 13 பேர் கடந்த புதன்கிழமை இந்த எச்சங்களில் தங்கள் உறவுகளின் எச்சங்களும் அடங்கியிருப்பதாக மாத்தளை நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

இம்மனுக்கள் தொடர்பான விசாரணை கடந்த திங்கட்கிழமை மாத்தளை நீதமன்றத்தில் நீதிவான் சத்துரிக்கா டி. சில்வா முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட போது மனுதாரர்கள் இம மனித எலும்புக்கூட்டு எச்சங்களில் தங்களின் உறவுகளின் எச்சங்களும் அடங்கியிருப்பதை சட்டத்தரணிகள் மூலம் மன்றுக்கு எடுத்துக்காட்டினர்.

இதனையடுத்து மனுதாரர்களின் (13 பேர்) வாக்கு மூலங்களைப் பதிவு செய்து அதன் அறிக்கையை எதிர்வரும் 31 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதவான் மாத்தளை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மனுதாரர்களின் வாக்கு மூலங்களை எதிர்வரும் 14 ஆம் திகதி பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகள் மீண்டும் எதிர்வரும் 31 ஆம் திகதி நீதிமன்றத்தில் இடம்பெறும்.

# ராஜஸ்தான் றோயல்ஸிடம் மண்டியிட்டது சுப்பகிங்ஸ்



சென்னை சுப்பகிங்ஸ் அணியுடனான போட்டியில் 5 விக்கெட்டுக்களால் ராஜஸ்தான் றோயல்ஸ் வெற்றிபெற்றது.

ஆறாவது ஐ.பி.எல். போட்டியின் 61 ஆவது ஆட்டம் நேற்றிரவு ஜெய்ப்பூரில் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் களத்தடுப்பை தீர்மானித்தது. இதனையடுத்து சுப்பகிங்ஸ் துடுப பெடுத்தாடியது. அவ்வணிசார்பாக ஹசி, விஜய் இருவரும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கி சிறந்த அடித்தளத்தை அமைத்தனர். அணி 11.3 ஓவரில் 83 ஓட்டங்களைப்பெற்றிருக்கையில் ஹசி (40) ஆட்டமிழந்தார்.


இதன்பின்னர் சுப்பகிங்ஸ்ஆட்டம் காணத்தொடங்கியது. விஜயுடன் இணைந்த ரெய்னா (1)டோனி (2)என ஆட்டமிழந்தனர் பின்னர் விஜயும்(55) ஆட்டமிழக்க சுப்பகிங்ஸ் 4 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப்பெற்றது. ஆட்டமிழக்காமல் ஜடேஜா 12 பிராவோ 23 ஓட்டங்களைப்பெற்றனர்.

பந்து வீச்சில் கூப்பர் 2, பின்னி 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 142 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸின் முன்வரிசை ரகானே 9, போல்க்னர் சம்சன் 0 ராவிட் 22 என வீழ்த்தப்பட்டபோதிலும் வட்சன் (70) பின்னி (41) இணைசிறப்பாக விளையாடி அணியை வெற்றி பெறவைத்தது. 17.1ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்த ராஜஸ்தான் றோயல்ஸ் 144 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

பந்து வீச்சில் ஹோல்டர் 2, சர்மா, மொறிஸ், பிராவோ தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக வட்சன் தெரிவானார்.

## மரண அறிவித்தல்



**மு. வ. சுப்பிரமணியம் மகாதேவா**

கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் மகாதேவா கடந்த 11.05.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பவளம் தம்பதியினரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பாக்கியம் தம்பதியினரின் மருமகனும் இராஜேஸ்வரியின் கணவரும் ஆவார். நிஷானந்தினி (ஜேர்மனி), பார்த்தீபன் (ஜேர்மனி), ஆகியோரின்பாசமிகு தந்தையும், பிறேமகுமார் (ஜேர்மனி), சீத்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் இரத்தினசபாபதி (பிரான்ஸ்), பாக்கியநாதன் (ஜேர்மனி),பரமேஸ்வரி, ஞானேஸ்வரி (பிரான்ஸ்) கமலேஸ்வரி, அசோக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, நாகேஸ்வரி, சொர்ணலக்சுமி, புஸ்பரத்தினம், யோகேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் அதீனா (ஜேர்மனி),அதீனன் (ஜேர்மனி), அக்ஷாயினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
(இ) தே. ஜெயகுமார் (மருமகன்)

# மின்சாரசபை பொறுப்பற்ற பதில் பாவனையாளர் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சாரசபையின் பொறுப்பற்ற பதிலால் மின்பாவனையாளர்கள் விசனமடைந்துள்ளனர். இது தொடர்பாக தெரியவருவதாவது. நேற்று இரவு 8 மணியளவில் யாழ்ப்பாணம் குருசோவீதி மற்றும் பழைய பூங்கா பகுதிகளுக்கான மின்விநியோகம் தடைப்பட்டது. வழமையாகவே மின்சாரம் தடைப்படுவது எனவும் ஒரு சில நிமிடங்களில் மீளவும் வந்து விடுமெனவும் அப்பகுதி மக்கள் காத்திருந்தனர். ஆனால் ஒரு மணிநேரம் சென்றும் மின்சாரம் வராததால் , தொலைபேசி மூலமாக மின்சாரசபை அலுவலகத்தை தொடர்பு கொண்டபோது தற்போது எதுவும் செய்யமுடியாதெனவும் நாளை (இன்று) காலையே வந்து பார்க்கலாமென கூறி தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டது.

எனினும் இவ்வூர் இளைஞர்கள் சிலர் நேரடியாக அலுவகத்திற்குச் சென்று கூறியபோதிலும், பதிலளித்தவர் எவ்வித பதிலும் கூறாமல் இருந்துள்ளார். இதனால் நேற்றிரவு முழுவதும் அப்பகுதி இருளில் மூழ்கிக்கிடந்தது.

பொதுவாக மின்சாரசபை 24 மணிநேர அத்தியாவசிய சேவையாக உள்ள போதிலும் அதிகாரிகளின் பொறுப்பற்ற பதில்களாலும், நடவடிக்கைகள் இல்லாமையாலும் பாதிப்படைவது தாமேயென பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (20)






இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.